உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-7 இதழ்-184

டிசம்பர் 16-31 2024

e-magazine



ஆஸ்ட்ரோ ஆச்சார்யா

ஹரிஹரசுதன்

கணித்த

2025

பலன்கள்



e-magazine

e-magazine

e-magazine

## சுருட்டை படையலாக ஏற்றுக் கொண்ட விராலிமலை முருகன்



# நோய்களை தீர்த்து இளமையை கொடுக்கும் பாதரச லிங்க வழிபாடு

ரச சமுச்சயம் என்ற நூலில், பாதரசலிங்கத்தைத் தொடர்ந்து ஆராதித்து வருவதால், எல்லாவித நோய்களிலிருந்தும் விடுதலை கிடைக்கிறது. வயதான காலத்தில், மனிதனை நோயின்றி வைத்துக் கொள்வதற்கு வேறெந்தத் தரவரத்திற்கோ, உலோகத்திற்கோ சக்தியில்லை. ஏனெனில் அவை எல்லாமே தண்ணீரில் கரைந்து போகக்கூடியவை; வெப்பத்தால் காய்ந்து போகக்கூடியவை. ஆனால் பாதரசம் ஒன்றுதான் எதனாலும் பாதிக்கப்படுவதில்லை.

பாதரசத்தை விசேஷச் செயல்பாடுகள் மூலம் திடபதார்த்த மாக்குவதால், அது அமிர்தமாகி விடுகிறது. அப்படி திடப்படுத்தப்பட்ட பாதரசத்தில் சிவலிங்கத்தை உருவாக்கி, அந்த லிங்கத்தை வழிபடும் பக்தர்களுக்கு கல்வி, அறிவு, செல்வம், சொத்து, சுகம், அமைதி, செழிப்பு, ஐஸ்வர்யம், மக்களன்பு முதலிய எல்லாப் பலன்களும் தானாகவே வந்தடைகின்றன. பாதரசம் நோய்களை அகற்றி புத்துயிரும் புது இளமையையும் கொடுக்கிறது.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

# முருகனுக்குரிய செவ்வாய்க்கிழமை விரதமும் கிடைக்கும் பலனும்

செவ்வாய் தோஷம் உள்ளவர்களும், தொடர்ந்து தீராத பிரச்னைகளை அனுபவித்து வருபவர்களும் மேற்கண்ட பிரச்சனை எளிதாக தீரவேண்டுமானால், செவ்வாய் கிழமைகளில் முருகப் பெருமானை வழிபட்டு விரதம் இருந்து வந்தால், விரைவிலேயே செவ்வாய் தோஷத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் அனைத்தும் படிப்படியாக நீங்கி விடும்.

செவ்வாய்க்கிழமை காலையில் நீராடி முடித்து, அருகில் உள்ள முருகப் பெருமான் ஆலயத்துக்கு சென்று வழிபடவேண்டும்.

பின்னர் வீடு திரும்பியதும் பால், பழச்சாறு மட்டும் அருந்தி முருகனின் திருநாமங்களை கூறி விரதம் இருக்கலாம்.

மாலையில் மீண்டும் கோவிலுக்கு சென்று முருகனை வழிபட்டு விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். இப்படி 9 செவ்வாய்க் கிழமைகள் விரதம் இருந்தால் செவ்வாய் தோஷத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் நீங்கிவிடும்.



# சேதமடைந்திருந்தாலும்

# சேக்கிழார் பிரதிஷ்டை செய்த லிங்கத்தை விரும்பிய சிவன்

நாயன்மார்களின் பெருமையைக் கூறும் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தை இயற்றியவர் சேக்கிழார் பெருமான் (அருண்மொழித் தேவர்) இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனின் அரசவையில் அமைச்சராகப் பணியாற்றியவர். பல்வேறு சிவாலயத் திருப்பணிகளைச் செய்த இவர்.

இவர் பெரியபுராணத்தைப் பாட தில்லையில் சிவபெருமானே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தாக நம்பிக்கையுண்டு.

சிவத்தொண்டின் காரணமாகவும், மதி நுட்பத்தின் காரணமாகவும் இவர் உத்தம சோழப் பல்லவன், தொண்டர் சீர் பரவுவார், தெய்வப்புலவர், தெய்வச் சேக்கிழார் போன்ற பட்டங்களைப் பெற் றவர்.

மிகப்பெரிய சிவபக்தரான சேக்கிழார் பல்வேறு ஆலயங்களில் சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்துள்ளார்.

அந்தவகையில், வட நாகேஸ்வரம் நாகேஸ்வரர் கோயிலில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்துள்ளார்.

இவ்வாறு சேக்கிழார் பிரதிஷ்டை செய்த சிவலிங்கம் கால மாற்றத்தால் சற்று சேதமடைந்தபோது, அந்த லிங்கத்திற்கு பதிலாக புதிய சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ய பக்தர்கள் தீவிர முயற்சி செய்தனர்.

ஒருகட்டத்தில் சேக்கிழார் பிரதிஷ்டை செய்த சேதமடைந்த அந்த சிவ லிங்கத்தை நீக்கிவிட்டு புதிய சிவ லிங்கத்தை பக்தர்கள் பிரதிஷ்டை செய்தனர்.

அப்போது ஒரு நாள் இவ்வூரில் இருக்கும் பக்தரின் கனவில் தோன்றிய சிவபெருமான், தனக்கு பழைய லிங்கத்தையே மீண்டும் பிரதிஷ்டை செய்யுமாறு கூறியுள்ளார்.

பக்தருக்கு கனவில் சிவனே வந்து கூறியதை உறுதி செய்த பக்தர்கள், சிவபெருமானின் கட்டளைப்படியே சேதமான அந்த பழைய லிங்கத்தையே மீண்டும் பிரதிஷ்டை செய்தனர் புதிய லிங்கத்தை சிவன் சந்நிதிக்கு பின்புறம் வைத்துள்ளனர்.

இத்தலத்தில் சேக்கிழாருக்கு தனி சந்நிதி இருக்கிறது. அனைத்து பூச நட்சத்திர தினத்தன்றும் இவருக்கு அபிஷேகம் பூஜைகள் நடக்கின்றன. மேலும் வைகாசி மாதத்தில் சேக்கிழார் சிவ தரிசனம் செய்யும் வைபவம் வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது.



e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com



# சிறப்பு வாய்ந்த பெருமாள் கோவில்கள்

- 108 திவ்ய தேசங்களில் வித்தியாசமான ஆதி வராகப் பெருமாள் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கள்வனூரில் காமாட்சி அம்மன் கோயில் முன்பு ஒரு மூலையில் பெருமாள் மிகச் சிறிய வடிவில் காட்சி தருகிறார்.
- திருச்சி முசிறி சாலையில் உள்ள வேத நாராயணன் கோயிலில் பெருமாள் அனைத்து வேதங் களையும் தலையணை யாக வைத்து படுத்திருப்பதால் வேத நாராயணப் பெருமாளாக காட்சி தருகிறார்.
- ஆசியாவிலேயே மிகப்பெரிய பள்ளி கொண்ட பெருமாளாக திருமயத்தில் காட்சி தருகிறார்.
- கர்நாடகத்தில் உள்ள ஸ்ரீரங்கபட்டினத்தில்

ரங்கநாதப் பெருமாள் ஏழு தலைகள் கொண்ட ஆதிசேஷனுடன் காட்சி தருகிறார்.

- ஸ்ரீவைகுண்டம் நத்தத்தில் ஆதி சேஷன் குடைப் பிடிக்க பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.
- காஞ்சிபுரத்தில் உள்ள விளக்கொளிப் பெருமாள் கோவிலில் பெருமாள் ஜோதி வடிவில் இருப்பதாக ஐதீகம்.
- கருங்குளத்தில் மூன்று அடிசந்தனக் கட்டை வடிவில் வைத்து பெருமாளாக அபிஷேகம் செய்து பூஜித்து வருகிறார்கள். இரு பக்கமும் சங்கு, சக்கரம் உள்ளது.
- மாமல்லபுரம் ஸ்தலசயனப் பெருமாள் ஒரு கரத்தை தலையில் வைத்தும், தரையில் சாய்வாக கால் நீட்டி சயனப் பெருமாளாக காட்சி தருகிறார்.
- காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் உள்ள அத்திவரதர் அனந்த சரஸ் என்ற திருக்குளத்தில் நீருக்கு அடியில் எழுந்தருளியுள்ளார். 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியே வந்து காட்சி தருகிறார்.
- திருப்பாற்கடல் ஊரில் உள்ள கே◌விலில் ஆவுடையார் மீது சிவலிங்கத்திற்கு பதிலாக பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார்.
- திருப்பதி ஏழுமலைக்கு மேல் நாராயண கிரி என்ற தலத்தில் ஏழுமலையானின் பாதச் சுவடுகள் உள்ளது. இதனை ஸ்ரீ வாரி பாதம் என்பர். பெருமாள் திருமலையில் முதலில் தடம் வைத்த இடம் இது என சொல்லப்படுகிறது.
- சிங்கப் பெருமாள் கோவிலில் நரசிம்ம பெருமாள் மூன்று கண்களுடன் காட்சி தருகிறார்.
- திருக்கண்ணபுரத்தில் கண்ணபுர பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி, பத்மினி, ஆண்டாள் என நான்கு தேவியருடன் பத்மாசனத்தில் காட்சி தருகிறார்.
- திருச்சி ஸ்ரீரங்கநாதர் கோவில் 'பூலோக வைகுண்டம்' என்ற பெருமையும், 108 வைணவத் திருத்தலங்களில் முதல் இடத்தைப் பெற்றது. கோயில் கருவறை மேல் தங்கத் தகடுகளால் வேயப்பட்ட விமானம் உள்ளது. விமானத்தின் மேல் ரிக், யஜூர், சாம, அதர்வண வேதங்களைக் குறிக்கும் வகையில் நான்கு தங்கக் கலசங்கள் உள்ளன. இங்கு பெருமாள் சேஷ சயனத்தில் (புஜங்க சயனம்) ஆதிசேஷன் மீது சயனித்து காட்சி தருகிறார்.



- சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோவிலில் உள்ள பெருமாள் சிலை 9 அடி உயரம் கொண்டவர். இங்கு இவர் முகத்தில் மீசையுடன் காட்சி தருகிறார். பெருமாள் தன் மனைவி, சகோதரர் என குடும்ப சகிதமாக உள்ளார். இவர் கையில் ஆயுதம் இன்றி காட்சி தருகிறார்.
- திருவள்ளூர் வைத்திய வீரராகவப் பெருமாள் கோவிலில் பெருமாள் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கியும், மூலவரின் வலது புறம் சாலி கோத்திர மகரிஷியும், இடது புறம் பிரம்மாவுக்கு உபதேசம் செய்யும் ஞான முத்திரையுடன் காட்சி தருகிறார்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

e-magazine
aanmeegamalar.com



# தீபாவளி பண்டிகைக்கு மட்டும் திறக்கப்படும் அதிசய கோவில்!!

தீபாவளி பண்டிகையன்று பெரும்பாலான மக்கள் கோவில் சென்று வழிபடுவது வழக்கம். அதிலும் சிலர் பிரசித்த பெற்ற கோவிலுக்கும் செல்வார்கள்.

இவ்வாறு இருக்கையில் கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹாசனாம்பா என்ற அம்மன் கோவில் ஒன்று உள்ளது. இந்த கோவில் தீபாவளி பண்டிகையின் போது மட்டும் திறக்கப்படும் அதிசய கோவிலாகும்.

இந்த கோவிலில் ஆண்டுக்கு ஒரு முறை, அதாவது 10 நாட்கள் மட்டுமே நடை திறந்து பூஜை நடத்தப்படும் என்பது சிறப்பம்சமாகும். அதாவது தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புரட்டாசி மாதம் இறுதி முதல் ஐப்பசி மாதம் முதல் வாரத்திற்குள் வரும் பவுர்ணமிக்கு அடுத்த வியாழக்கிழமை கோவில் நடை திறக்கப்பட்டு, அமாவாசைக்கு அடுத்த 3 ஆவது நாள் கோவில் நடை சாத்தப் படுவது வழக்கமாக உள்ளது. அதாவது 10 நாட்களும் இரவு முழுவதும் நடை சாத்தப்படாமல் திறந்தே இருக்கும்.

கோவில் நடை திறக்கப்படும் முதல் நாளில் ஹாசன் மாவட்டம் மற்றும் மாநிலம் முழு வதில் இருந்தும் பக்தர்கள் கோவிலுக்கு வருவார் கள். கோவிலின் தலவார் குடும்பத்தினர் கர்ப்ப கிரகத்துக்கு நேராக வாழைத் தண்டுகளை நட்டு வைத்து பூஜை செய்து, ஹாசனாம்பா அம்மனை பஜனைகள் பாடி வழிபடுவார்கள். பின்னர் அந்த வாழைத்தண்டுகளை வெட்டி, கோவில் நடை திறக்கப்படுவது இன்றுவரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.



# தீய நாளாக இருந்தாலும் நல்ல நாளாக மாற்றும் வழிமுறை



ஒரு சுபதினத்தை தேர்வு செய்வதற்கு முன் அன்றைய நாளில் நேத்திரம், ஜீவன் உள்ளதா? என்று பஞ்சாங்கத்தில் கவனித்து பார்ப்பார்கள். ஏனெனில் சுபகாரியங்கள் நல்லபடியாக நடை பெற்று, அபரிவிதமான நல்ல பலன்களை அள் ளித்தர அந்த நாள் சக்தி வாய்ந்த நாளாக இருக்க வேண்டும்.

மனிதனுக்கு உயிர் எவ்வளவு முக்கியமோ அதுபோல ஒரு நாளுக்கு மிகுந்த சக்தியை கொடுப்பது நேத்திரமும், ஜீவனும் தான். ஆம்! ஒரு நல்ல நாளுக்கு உயிரும், உடலுமாக இருப் பது நேத்திரம், ஜீவன் மட்டுமே!

## நேத்திரம் என்பதன் பொருள்

நேத்திரம் என்றால் கண்கள் என்று பொரு ளாகும். பாதைகள் சிக்கலாக இருந்தாலும் விழி கள் இருந்தால் சிக்கலையும் எளிமையாக கடந்து செல்ல இயலும் அல்லவா! அதுபோல தான் ஒரு நாள் எவ்வளவு சிக்கல்கள் நிறைந்ததாக இருந் தாலும் அந்த நாளில் நாம் மேற்கொள்ள போகும் செயலுக்கு ஒரு உதவியோ அல்லது தடையை நீக்குவதற்கான ஆலோசனைகள் கிடைத்தால் அது சிக்கலை குறைப்பதற்கு உதவும் அல்லவா!

ஒருநாளின் வலிமையை நேத்திரம் மூலம் மூன்று வகைகளில் நாம் அறிந்து கொள்ளலாம்.

### 1.இரண்டு கண் உள்ள நாட்கள்:

இந்நாட்கள் மிகச்சிறந்த பலன்களை வழங்கும் நாட்கள். எந்தவொரு சுப செயலையும் இந்த நாட்களில் மேற்கொள்ளலாம்.

### 2. ஒரு கண் உள்ள நாட்கள்:

இந்நாட்கள் மிதமான பலன்களை வழங்கும் நாட்கள். இந்த நாட்களில் சுப செயல்களை மேற் கொள்ள சற்று கவனமாக இருப்பது நல்லது.

### 3. குருட்டு நாட்கள்:

இந்நாட்கள் ஆபத்துகள் மற்றும் தடைகள் நிறைந்த நாட்கள்.

இந்த நாட்களில் முக்கிய செயல்களை தவிர்ப் பது நல்லது. ஏனெனில் பலவிதமான தடைகளை இந்நாட்களில் எதிர்கொள்ளலாம்.

ஆகவே, நாம் செய்யும் செயலுக்கு எந்த நாள் சரியாக இருக்கும் என்பதையும் நாம் இதன்மூலம்

e-magazine
aanmeegamalar.com



தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்.

**நேத்திரம் கணக்கிடும் முறை:**

அஸ்வினி முதல் அன்றைய நட்சத்திரம் வரை உள்ள நாட்களை எண்ணி, அந்த எண்ணிக்கையை ஒன்பதால் வகுத்து மீதி வந்த எண்ணின் நிலையை பொறுத்து அந்த நாளின் வலிமையை அறிந்து கொள்ள முடியும்.

**மீதியின் அடிப்படையில் வகைப்படுத்தல்:**

மீதிகள் 1, 2, 3, 4 : இரண்டு கண் உடைய நாள் சுபம்!

மீதிகள் 5, 6, 7 : ஒரு கண் உடைய நாள் மத்தியமான சுபம்!

மீதிகள் 8, 9, 0 : குருட்டு நாள் சுபம் தவிர்க்க வேண்டும்.

**உதாரணத்திற்கு**

ஒரு நாள் 14வது நட்சத்திரம் ஆக இருந்தால்,

14 ÷ 9 = 1 மீதி 5

மீதி 5 என்பதால், ஒரு கண் உடைய நாள் மத்தியமான பலன்களை கொடுக்கும்.

**ஜீவன் என்றால் என்ன?**

ஒரு நாள் எவ்வளவு தான் சிறப்பு நிறைந்ததாக இருந்தாலும் அந்த நாள் ஜீவன் நிறைந்த நாளாக இருந்தால் நாம் செய்ய நினைக்கும் காரியங்களில் எதிர்பார்த்த அனைத்து வெற்றிகளும், லாபங்களும் கிடைக்கும்.

நேத்திரம் எப்படி மூன்று விதங்களில் பிரிக்கப்பட்டு இருக்கிறதோ அதே போன்று தான் ஜீவனும் மூன்று விதங்களில் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது,

**முழு ஜீவன்** – முழு வாழ்க்கை, மிகச் சிறந்த நாள்.

**அரை ஜீவன்** – அரை வாழ்க்கை, மத்தியமான பலன்களை தரும் நாள்.

**ஜீவன் இல்லாத நாள்** – உயிரற்ற நாள், நல்ல காரியங்களை தவிர்க்க வேண்டிய நாள்.

**ஜீவன் கணிதமுறைகள்:**

சூரியன் இருக்கும் நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஜீவன் வகைப்படுத்தப்படுகிறது.

சூரியன் இருக்கும் நட்சத்திரத்திற்கு முன், பின் உள்ள நட்சத்திரம் ஜீவன் இல்லாத நட்சத்திரங்கள். ஆகையால் இந்நாட்களை தவிர்க்க வேண்டும்.

சூரியன் இருக்கும் நட்சத்திரத்திற்கு 3, 4, 5, 6, 7, 8 முன், பின் உள்ள நட்சத்திரங்கள் அரை ஜீவன் உள்ள நட்சத்திரங்கள். மத்திம பலன்களை கொடுக்கும்.

சூரியன் இருக்கும் நட்சத்திரத்திற்கு 9 13 முன், பின் உள்ள நட்சத்திரங்கள் ஒரு ஜீவன் உள்ள நட்சத்திரங்கள். நன்மையை தரும்.

e-magazine
aanmeegamalar.com

# முதல்நிலை அடைய உதவும் விரதம்

கந்தனை வளர்க்க சிவபெருமான் கார்த்திகை பெண்களான அறுவரை நியமித்தார்.

கார்த்திகை பெண்களே! நீங்கள் எம் குமாரனை பாலூட்டி வளர்த்த காரணத்தால் இன்று முதல் உங்கள் பெயரிலேயே முருகன் கார்த்திகேயன் என்ற பெயர் பெறுவான்.

அது மட்டுமல்ல உங்களின் நாளாகிய கிருத்திகை நட்சத்திரத்தன்று விரதமிருந்து முருகனை வழிபடுவோர் இன்னல்கள் அனைத்தும் நீங்கி வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வாழ்வார்கள் என்று கூறி ஆசிர்வதித்தார்.

அவ்வாறே இன்றும் முருகபக்தர்கள் யாவரும் கார்த்திகை விரதம் இருந்து முருகனின் பேரருளைப் பெற்று வருகிறார்கள்.


சிவனின் வரத்தின்படி கார்த்திகை நட்சத்திரத்தன்று விரதம் இருந்து முருகப் பெருமானை வழிபடுபவர்கள், நிறைவான அறிவு, நிலையான செல்வம், நீண்ட ஆயுள், அன்பும் பண்பும் நிறைந்த வாழ்க்கைத்துணை, நல்ல குணமுள்ள குழந்தைகள் ஆகிய பேறுகளைப் பெற்று சிறப்புற வாழலாம்.



**தண்ணீர் மட்டும் அருந்தி முருகப்பெருமானின் மந்திரங்கள், முருகன் துதிகளை பாராயணம் செய்து ஜெபம், தியானம் கோவில் வழி பாடு இவைகளை செய்தல் வேண்டும்.**

**தேவரிஷிகளில் முதன்மையான வராகப் போற்றப்படும் நாரத மகரிஷி, விநாயகப் பெருமானின் உபதேசப்படி கார்த்திகை விரதத்தை அனுஷ்டித்தே முதன்மைச் சிறப்பைப் பெற்றார்.**

மாலையில் வீட்டில் முருகனுக்கு நெய்வேத்தியம் செய்து வழிபடலாம். கோவிலுக்கு செல்லலாம்.



### நேத்திரமும் ஜீவனும் ஏற்படுத்தும் தாக் கங்கள்:

முழுமையாக நேத்திரமும், ஜீவனும் இருக்கும் நாள்: ஒரு நாளில் நேத்திரம் இரண்டு கண்கள், ஜீவன் முழு வாழ்க்கையாக இருந்தால், நினைத்த செயல்கள் எதிர்பார்த்த முறையில் நடைபெறும். வெற்றிகள் கிடைக்கும்.

இந்நாளில் என்ன செய்யலாம்?

தொழில், கல்வி, திருமணம் போன்ற அனைத்து முக்கிய சுப செயல்களை மேற்கொள்ளலாம்.

### நேத்திரமும், ஜீவனும் மத்தியமான நாள்:

ஒரு நாளில் நேத்திரம் ஒரு கண்ணாகவும், ஜீவன் அரை வாழ்க்கையாகவும் இருந்தால், சிறு அளவிலான வெற்றிகள் கிடைக்கும். ஆனால் அவ்வளவு எளிதாக வெற்றி கிடைக்காது. சவால்கள் மற்றும் அலைச்சல்கள் ஏற்படும்.

இந்நாளில் என்ன செய்யலாம்?

சாதாரண செயல்கள், நுண்ணறிவு செயல்களை மேற்கொள்ளலாம்.

### நேத்திரமும், ஜீவனும் இல்லாத நாள்:

ஒரு நாளில் நேத்திரம் குருட்டாகவும், ஜீவன் உயிரற்றவையாகவும் இருந்தால் எதிர்பார்த்த வெற்றிகள் பெற முடியாது.

இந்நாளில் முக்கிய செயல்களை தவிர்ப்பது நல்லது. ஏனெனில் பலவித தடைகள் ஏற்படலாம்.

நேத்திரம் மற்றும் ஜீவன் ஆகியவை பஞ்சாங்கத்தின் முக்கிய அம்சங்களாகும். ஒருநாளின் சிறப்புகளை, ஆபத்துகளை புரிந்து கொண்டு, சரியான நேரத்தில் சரியானசெயல்களை மேற்கொள்ள இது உதவுகிறது. ஜோதிடர் ஆலோசனை பெறுவதன் மூலம், இந் அம்சங்களை முழுமையாக பயன்படுத்தி, வாழ்க்கையில் சிறந்த முடிவுகளை எடுக்க முடியும்.




# Aanmeega Malar

## English magazine

## coming soon...

## covering all spiritual information

For more details

9444228203

(9 AM to 4 PM)

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

# 2025-ஆம் ஆண்டு

# ராசி பலன்கள்




இந்த ஆண்டில் முக்கியமான கிரக பெயர்ச்சிகள் நடைபெறவுள்ளன, அவற்றில் குரு, சனி, ராகு, மற்றும் கேது பெயர்ச்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

குரு பெயர்ச்சி: மே 14ம் தேதி, புதன்கிழமை, குரு பகவான் ரிஷப ராசியிலிருந்து மிதுன ராசிக்கு பெயர்ச்சியாக உள்ளார்.

ராகு கேது பெயர்ச்சி: மே 18ம் தேதி, ராகு கும்ப ராசியிலும், கேது சிம்ம ராசியிலும் புதிய இடமாற்றம் பெறுகிறார்கள்.

சனி மற்றும் ராகுவின் சேர்க்கை: மார்ச் 29 முதல் மே 18 வரை 50 நாட்களுக்கு சனி மற்றும் ராகு இணைந்து மீன ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளனர். இதை சராபிட் தோஷம் எனவும் கூறலாம் .

கிரக பெயர்ச்சிகள் ஒவ்வொரு ராசியிலும் வாழ்க்கையின் பல துறைகளில் (கல்வி, தொழில், ஆரோக்கியம், பொருளாதாரம்) முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தும்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்

## மேஷம்

மேஷ ராசியினருக்கு இந்த ஆண்டில் வேலை மற்றும் தொழில் தொடர்பான பயணங்கள் மற்றும் வெற்றியின் வாய்ப்புகள் அதிகம்.

நிதி நிலை நிலைத்ததுடன், சொந்த தொழிலில் லாபம் பெருகும். குடும்ப உறவுகளில் சில சவால்களை சந்திக்க நேரிடலாம்.

பரிஹாரம்:

ஓம் கிரீம் க்ளீம் சௌம் குரவே நம:"

என்ற மந்திரத்தை தினமும் 108 முறை ஜபிக்கவும்.

வீட்டில் துர்க்கை அம்மனை வழிபட்டு கும்கும அர்ச்சனை செய்யுங்கள். உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## ரிஷபம்

ரிஷப ராசியினருக்கு இந்த ஆண்டில் புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடங்குவதற்கு



ஆன்மிகமலர்.காம் இணைய இதழுக்கு 2025ம் ஆண்டு ராசிபலனை துல்லியமாக கணித்து எழுதியவர் ஜோதிஷ் ப்ரவீன, ஜோதிஷ் விஷ்ரத, ஜோதிஷ் சாஸ்த்ரி, ஜோதிஷ் ஆச்சார்ய, ஜோதிஷ் வாசஸ்பதி டாக்டர்

ஆஸ்ட்ரோ ஆச்சார்யா

V S ஹரி ஹர சுதன்,P.hd.,

+91 7339175496 sudancool2001@gmail.com

மிகவும் சாதகமாக இருக்கும்.

புதிய வாய்ப்புகள் கிடைத்து, வருமானத்தின் புதிய வழிகளை திறக்கக்கூடும்.

வேலை மற்றும் வியாபாரம் தொடர்பான பயணங்களில் ஈடுபட்டு, அதில் நன்மைகள் மற்றும் லாபங்களை பெறுவது சாத்தியமாகும்.

பரிஹாரம்:

"ஓம் கிரீம் க்ளீம் சௌம் குரவே நம:"
மந்திரத்தை தினமும் 108 முறை ஜபிக்கவும்.

வெள்ளிக்கிழமைகளில் மகாலக்ஷ்மி வழிபாடு செய்யுங்கள்.

சனி மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்கள் இந்த ஆண்டில் வேலை மற்றும் சொந்த தொழிலில் சிறந்த வெற்றியை எதிர்பார்க்கலாம்.

உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு காணலாம்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம், குறிப்பாக செப்டம்பர் மாதம் உடல் நல பாதிப்புகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

பரிஹாரம்:

கோவிந்தா என்ற மந்திரத்தை தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

ருத்ராபிஷேகம் செய்ய நல்ல பலன் பெறலாம்

சனி மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## கடகம்

கடக ராசிக்காரர்களுக்கு இந்த ஆண்டில் வேலை பயணங்கள் நன்மையை தரும்.

பங்குச்சந்தை மற்றும் ஊக வணிகங்களில் எச்சரிக்கையாக இருக்கவும். முதலீட்டில் கூடுதல் கவனம் தேவை, மற்றும் திட்டமிட்டு செயல் படுவதே வெற்றி நிச்சயமாக கிடைக்கும் .

பரிஹாரம்:

ஓம் காயத்திரி மந்திரம்
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்

சூரியபூஜை மற்றும் சந்திர பூஜை அல்லது நவராதிரி பூஜை செய்ய நல்ல பலன் பெறலாம்

சனி மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## சிம்மம்

சிம்ம ராசிக்காரர்கள் இந்த ஆண்டில் வேலை மாற்றங்கள் மற்றும் இடமாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

புதிய சூழலுக்கு பழகி, தொழிலில் வளர்ச்சி பெறுவீர்கள். ஆரோக்கியத்தை கவனித்தல் முக் கியம்.

பரிஹாரம்:

ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹௌம் சூர்யாய நமஹ
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

சனி மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

ஹனுமான் சாலிசா ஒவ்வொரு நாளும் விரி வாகப் பாடுவதன் மூலம் தொழிலில் வெற்றி மற்றும் வளர்ச்சியையும் பெற முடியும்.

## கன்னி

கன்னி ராசிக்காரர்கள் இந்த ஆண்டில், கேது வின் பிடி விலகுவதால் தொழிலில் முன்னேற்றம் மற்றும் நிதிநிலையில் வளர்ச்சி காண்பீர்கள்.

மனைவியுடன் உறவு மகிழ்ச்சியாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மற்றும் குடும்ப உறவை கவனத்தில் கொள்ளவும்.

பரிஹாரம்:

ஓம் ராகு கேதவே நமஹ தினமும்
108 முறைகள் ஜபிக்கவும்.

ஓம் ஸ்ரீ குரு விநாயகாய நமஹ
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

சனி, ராகு, கேது மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## துலாம்

துலாம் ராசிக்காரர்கள் இந்த ஆண்டில், ஆற்றலும், மன உறுதியும் அதிகரிக்கும். வேலை யில் சிறந்த முன்னேற்றம் காண்பீர்கள்.

ஆனால் குடும்பத்தில் மன கவலை உருவாகலாம். உறவுகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துவது முக்கியம்.

பரிஹாரம்:

"ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹௌம் சூர்யாய நமஹ"
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

சனி, ராகு மற்றும் கேதுவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

வெள்ளிக்கிழமைகளில் மகாலக்ஷ்மி வழிபாடு செய்யுங்கள்.

## விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்கள் இந்த ஆண்டில் ,

e-magazine aanmeegamalar.com

எதிர்பாராத நிதி நன்மைகள் மற்றும் தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

குறைந்த முயற்சியில் அதிக நன்மைகள் அடைவதற்கான வாய்ப்பு உள்ளது. மாணவர்களுக்கு படிப்பில் சிறந்து விளங்க சிறந்த நேரம்.

பரிஹாரம்:

ஓம் கணபதயே நமஹ"
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

ஓம் ஸ்ரீ சண்டிகா தேவியே நமஹ"
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

சனி, ராகு, கேது மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.



## தனுசு

தனுசு ராசிக்காரர்கள் இந்த ஆண்டில், தனிப்பட்ட திறமைகள் மூலம் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

சுய முன்னேற்றமும், குடும்ப உறவுகளையும் வளர்ப்பதில் கவனம் செலுத்துவது முக்கியம்.

இது உங்கள் மன நிம்மதி மற்றும் நன்மையை அதிகரிக்கும்.

பரிஹாரம்:

"ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹௌம் சூர்யாய நமஹ"
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

"ஓம் சங்கராய நமஹ" தினமும் 108
முறைகள் ஜபிக்கவும்.

சனி, ராகு, கேது மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## மகரம்

மகரம் ராசிக்காரர்கள் இந்த ஆண்டில், ஏற்ற, இறக்கமான சூழலை சந்திக்கலாம்.

குடும்ப உறவுகளையும், வேலை மற்றும் தொழிலில் சமநிலையை பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

சவாலான நேரங்களில், உறவுகள் மற்றும் நண்பர்களின் ஆதரவு உதவும்.

பரிஹாரம்:

"ஓம் சனாய நமஹ"
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

சிவபூஜை மற்றும் விஷ்ணு பூஜை செய்யவும்.

சனி, ராகு, கேது மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## கும்பம்

கும்ப ராசிக்காரர்கள் இந்த ஆண்டில், தொழில் மற்றும் வேலை தொடர்பான வெற்றியும் பயண வாய்ப்புகளும் கிடைக்கும்.

உங்கள் பணியிடத்தில் சிறப்பாக விளங்க, ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்துவது முக்கியம்.

அணுகுமுறை பூர்வமான கவனம் அதிக பலனை தரும்.

பரிஹாரம்:

"ஓம் விஷ்ணு பகவானே நமஹ"
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தியே"
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

சனி, ராகு, கேது மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

## மீனம்

மீன ராசிக்காரர்கள் இந்த ஆண்டில், குடும்ப வாழ்க்கையில் மாற்றங்கள் மற்றும் உணர்ச்சி வசப்படக்கூடிய சூழல் இருக்கும்.

கருத்து மோதலும், மன கசப்பும் ஏற்படலாம். சொந்த வளர்ச்சிக்கு புதிய வாய்ப்புகள் உள்ளன.

பரிஹாரம்:

ஓம் ஸ்ரீ சந்திராய நமஹ
தினமும் 108 முறைகள் ஜபிக்கவும்.

விஷ்ணு சகஸ்ரநாமத்தை
தினசரி படித்து வந்தால் நல்லது.

சனி, ராகு, கேது மற்றும் குருவிற்கு உரிய தசாபுக்தி நாணயம் ஆணிய நலன் பலன் பெறலாம்.

# கொடுத்த கடனை திரும்ப வரவைக்கும் அனுமன் வழிபாடு



நம்மிடம் இருக்கக்கூடிய பணத்தை ஏதோ ஒரு காரணத்திற்காக பிறருக்கு கடனாகவோ அல்லது உதவியாகவோ தந்து இருப்போம். அதை அவர்கள் திருப்பி தராமல் நம்மை ஏமாற்றும் நோக்கில் இருந்தாலும் அல்லது அவர்களால் திருப்பித் தர இயலாத சூழ்நிலையில் இருந்தாலும் அதனால் பாதிக்கப்படுவது கொடுத்தவராகத்தான் இருப்பார்கள்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

இப்படி பலரும் பல விதங்களில் மாட்டிக்கொண்டு விழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆஞ்சநேயரை முழுமனதோடு நம்பி ஆஞ்சநேயருக்கு உகந்த கிழமையான வியாழக்கிழமை அல்லது சனிக்கிழமை அல்லது மூல நட்சத்திரம், அமாவாசை போன்று நாட்களிலும் ஒருசில பூஜையின் மூலம் இழந்த பணத்தை மீண்டும் பெறலாம்.

வீட்டில் பூஜையறையில் ஒரு பிளாஸ்டிக் தட்டில், புதிதாக வாங்கி வந்த கல்லுப்பை கோபுரம் போல கொட்டிக் கொள்ளுங்கள். அடுத்ததாக ஒரு வெள்ளை நிற பேப்பரை எடுத்து ப்ளூ கலர் பேனாவை பயன்படுத்தி யார் நமக்கு பணம் தர வேண்டுமோ அவர்களுடைய பெயரை எழுத வேண்டும்.

எத்தனை நபர்கள் தரவேண்டியதாக இருந்தாலும் அத்தனை நபர்களின் பெயர்களையும் அந்த பேப்பரில் எழுத வேண்டும். இந்த பேப்பரை அப்படியே கோபுரமாக கொட்டி வைத்திருக்கும் கல்லுப்பின் மேல் வைக்க வேண்டும். அடுத்ததாக ஒரே ஒரு மாவிளக்கை தயார் செய்து வைத்துக்

e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

கொள்ளுங்கள். இந்த மாவிளக்கை அந்த பேப்பரின் மேல் வைத்து கடுகு எண்ணெய் ஊற்றி இரண்டு திரிகளை ஒன்றாக திரித்து போட்டு தீபம் ஏற்ற வேண்டும்.

ஹனுமன் சாலிசா பாடலை ஒன்பது முறை படிக்க வேண்டும். அதை படிப்பதற்கு சிரமமாக இருக்கிறது என்று நினைப்பவர்கள் ஒன்பது முறை தொடர்ச்சியாக அந்த பாடலை ஒலிக்கச் செய்து கேட்க வேண்டும். அப்படி கேட்கும் பொழுது முழுமனதோடு ஆஞ்சநேயரை மட்டுமே நினைத்துக் கொள்ள வேண்டும். ஒன்பது முறை கேட்டு முடித்த பிறகு உங்களுடைய பணம் திரும்ப கிடைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

இப்படி தொடர்ச்சியாக 43 நாட்கள் தீபம் ஏற்றி வழிபாடு செய்ய வேண்டும். தினமும் மாவிளக்கை மட்டும் புதிதாக வைக்க வேண்டும். உப்பு, பெயர்கள் எழுதிய பேப்பர் அது அப்படியே இருக்கட்டும். ஒவ்வொரு நாளும் ஏற்றிய மாவிளக்கை மறுநாள் கால்படாத இடத்தில் போட்டு விடுங்கள்.

43 நாட்கள் கழித்து கல் உப்பை தண்ணீரில் கரைத்து அந்த பேப்பரையும் தண்ணீருக்குள் போட்டு நன்றாக கரைத்து அதை கால் படாத இடத்தில் ஊற்றி விட வேண்டும். தினமும் அனுமன் சாலிசா ஒன்பது முறை படிக்கவோ, கேட்கவோ செய்ய வேண்டும்.

உப்பை வைத்து இந்த முறையில் நாம் தீபம் ஏற்றி ஆஞ்சநேயரை வழிபாடு செய்யும்பொழுது ஆஞ்சநேயரின் அருளால் நாம் கொடுத்த பணம் கொடுத்த இடத்தில் இருந்து எந்தவித தங்கு தடையும் இல்லாமல் திரும்பி வரும்

– எம் அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி
செல்: 9750333265

## காரணம் இல்லாத பிரச்சனையை தீர்க்கும் அரச இலை



சிலரது வீடுகளில் காரணமே இல்லாமல் ஏதாவது, பிரச்சனை வந்து கொண்டே இருக்கும். இதுபோல தொடர் பிரச்சனைகளை சந்திப்ப வர்கள் தினமும் காலையில் குளித்து விட்டு, அரச மரத்தை 27 அல்லது 108 முறை சுற்றி வந்து, பிறகு அரச இலையை வாயில் போட்டு மென்று விட வேண்டும். அரச இலை மருத்துவ குணம் மிக்கது என்பதால் இதை மென்று சாப்பிடுவதால் உடலுக்கும், மனதிற்கும் ஆரோக் கியம், பலம் ஏற்படும். இதனால் நமக்கு வரக் கூடிய கெட்ட நேரமும் கூட நல்ல நேரமாக மாறி விடும்.

ஆன்மிகமலர் .காம்

# காசியில் காணவேண்டிய சூரிய பகவான் கோவில்கள்



உத்தராார்க் ஆதித்யா

e-magazine
aanmeegamalar.com

## உத்தராார்க் ஆதித்யா

காசி காண்டம், அத்தியாயம் 47 படி, நீண்ட காலத்திற்கு முன்பு, பிரியவ்ரத் என்ற பிராமணர் தனது அழகான மனைவியான சுபவ்ரதாவுடன் காசியில் வசித்து வந்தார்.

இருவரும் மிகவும் மத நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் சுலக்ஷனா என்று பெயரிடப்பட்ட ஒரு அழகான பெண் குழந்தையைப் பெற்றனர். பெண் நான்காம் வீட்டில் குருவுடன் மூல நட்சத்திரம், 1 வது பாதத்தில் இல் பிறந்தார். இந்த சேர்க்கை நல்லதாக கருதப்படவில்லை.

குழந்தை வளர்ந்து அழகான பெண்ணாக அனைத்து வீட்டு வேலைகளையும் நன்கு அறிந்தாள். அவள் திருமண வயதை நெருங்கியதும், அவள் மூல நட்சத்திரத்தில்




பிறந்ததால் அவளுக்குப் பொருத்தமான ஒருவரைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவளுடைய தந்தை கவலைப்பட்டார்.

தொடர்ச்சியான கவலைகளால் அவர் நோய்வாய்ப்பட்டார், கவலைகளுக்கு சிகிச்சை இல்லாததால், அவர் விரைவில் இறந்தார். துக்கத்தில் மூழ்கி, சிறுமியின் தாயும் இறந்துவிட்டார், சிறுமியை உலகில் தனியாக விட்டுவிட்டார்.

சிறுமி தனது பெற்றோரின் சடங்குகளை முறையாகச் செய்தாள், அவள் உத்தரார்க் ஆதித்யாவின் வடிவில் சூரியனைப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள். அவள் கணிசமான காலம் கடுமையான தவம் செய்தாள், மேலும் ஒரு வெள்ளை ஆடு தினமும் வந்து அவளைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். ஆடு காலையில் குண்டத்தில் குளித்து, நாள் முழுவதும் காத்திருந்து, மாலையில் காய்ந்த புல்லைத் தின்று, உத்தரார்க் குண்டத்தில் உள்ள தண்ணீரைக் குடித்துவிட்டுத் திரும்பிச் செல்லும் இது பல வருடங்கள் தொடர்ந்தது இந்த வழக்கம்.

ஒரு நாள் சிவபெருமானும் பார்வதி தேவியும் மேலே பயணம் செய்து கொண்டிருந்தனர், அவர்கள் இந்த பெண்






e-magazine aanmeegamalar.com

காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.





(மெலிந்து போன) உத்தரார்க் ஆதித்யா முன் பிரார்த்தனை செய்வதைக் கண்டனர். சிவபெருமான் மற்றும் பார்வதி தேவி இருவரும் சுலக்ஷனாவின் பிரார்த்தனையால் மிகவும் ஈர்க்கப்பட்டனர் மற்றும் சிவபெருமான் சிறுமிக்கு ஒரு தெய்வீக வரம் வழங்கினார்.

சுலக்ஷனா சிறிது நேரம் யோசித்துவிட்டு அருகில் நின்றிருந்த ஆட்டைப் பார்த்தாள். தனக்குப் பதிலாக ஆட்டுக்கு வரம் தருமாறு சிவபெருமானிடம் வேண்டினாள்.

பார்வதி தேவி சுலக்ஷனா வெளிப்படுத்திய பரோபகாரத்தால் நெகிழ்ந்து, சுலக்ஷனா பார்வதி தேவியுடன் எப்போதும் துணையாக இருப்பாள் என்று ஆணையிட்டார். உத்தராார்க் குண்டத்தில் உள்ள பக்தியைக் கருத்தில் கொண்டு ஆடு காசி ராஜாவின் மகளாக மறுபிறவி எடுக்கும், என்றும் கூறினால் தேவி.

காசி காண்டத்தின் கூற்றுப்படி, ஆட்டின் நேர்மைக்காக குண்டம் நினைவுகூரப்படும் என்று பார்வதி தேவி கூறினார் கடுமையான குளிர்கால மாதங்களில் கூட ஆடு குண்டில் தவறாமல் குளித்துக்கொண்டிருந்தது).

குண்டிற்கு பர்கரி குண்ட் என்று பெயரிடப் பட்டது குண்ட் இப்போது உள்ளூர் மொழியில் பக்ரியா குண்ட் என்று அழைக்கப்படுகிறது.

அனைத்து பக்தர்களும் பௌஷ்ய மாதத்தில் மேற்கண்ட குண்டத்தில் நீராட வேண்டும், மற்றும் இம்மாதம் (டிசம்பர் ஜனவரி) ஞாயிற்றுக்கிழமைகளில் உத்தரார்க் ஆதித்யாவிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். சடங்குகளைச் செய்வதன்மேற் கண்ட மூலம். அவர்கள் தெய்வீக ஆசீர் வாதத்தைப் பெறுவார்கள்.

## விமல் ஆதித்யா

நீண்டநாட்களுக்கு முன், விமல்என்ற ஒருவர்மலைப்பாங்கான இடத்தில் வசித்து வந்தார். முற்பிறவியில் செய்த சில பாவங்களால், அவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டார்.

காசியைப் பற்றி கேள்விப் பட்ட அவர், தனது குடும்பம் மற்றும் உடை மைகளை விட்டு விட்டு, காசிக்கு வந்து, முழு மனது டன் பகவான் சூரியனை வணங்கத் தொடங் கினார்.

சூரிய பகவானுக்கு விதிக்கப்பட்ட அனைத்து வகையான பூஜைகள், புஷ்ப அர்ச்சனை மற்றும் பிற சடங்குகளை அவர் செய்தார். அவரது பக்தியான செயல்கள் அவர் முன் தோன்றிய சூரிய பகவானை மகிழ்வித்தது மற்றும் அவரது தெய்வீக ஆசீர்வாதத்தால், விமல் தனது தொழுநோயி லிருந்து குணமடைந்தார். சூரிய பகவானும் விமலுக்கு ஒரு தெய்வீக விருப்பத்தை வழங் கினார்.

விமல் தனது பக்தர்கள் அனைவருக்கும் இந்த பயங்கரமான நோயால் ஒருபோதும் பாதிக்கப்படக்கூடாது என்று சூரிய பகவானிடம் வேண்டுகோள் விடுத்தார். அவர்கள் வாழ்க்கையில் எந்த விதமான கஷ்டங்களையும் சந்திக்கக் கூடாது. சூரிய பகவான் அதற்கேற்ப அருள் செய்தார்.

காசி காண்டத்தின்படி அந்த இடத்தில் அவரை விமல் ஆதித்யா என்று பக்தர்கள் அறிவார்கள். மேலும், சூரிய பகவான் எப்போதும் விமல் ஆதித்யாவின் விக்ரஹத்தில் இருப்பார் மற்றும் தொடர்ந்து தனது பக்தர்களை ஆசீர்வதிப்பார். காசி காண்டத்தின் கூற்றுப்படி, விமல் ஆதித்யாவை தரிசனம் செய்வதே அனைத்து வகையான நோய்களையும் குணப்படுத்தும்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178

e-magazine
aanmeegamalar.com




# Aanmeega Malar

## English magazine

coming soon...

## covering all spiritual information

For more details

9444228203

(9 AM to 4 PM)

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

# கள்ளி செடியும் கன்னிமார் தெய்வமும்

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை முறையை இன்னும் ஆயிரம் வருடங்கள் கழித்துவரும் சமூதாயம் எப்படி அறிந்து கொள்ளும்? அவர்களுக்கென்று நாம் வைத்து போகும் தகவல்கள் ஒருபக்கம் இருந்தாலும் அதையும் தாண்டிய சில பௌதிகமான ஆதாரங்களை வைத்தே உறுதியான தகவல்களை வைத்தே அவர்களால் பெற்றுக்கொள்ள முடியும். இன்றைய நவீன விஞ்ஞானம் வளர்ந்து கொண்டே வருவதனால் நாளைய மக்கள் நம்மை பற்றி அறிந்து கொள்வதற்கு வெகுவான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படாது என்று துணிந்து நம்பலாம். ஆனால் நம் காலத்திற்கு முற்பட்ட கால மக்களின் வாழ்க்கை நிலையை முற்றிலுமாக அறிந்து கொள்ள நமக்கு போதிய ஆதாரங்களும் வசதிகளும் இல்லை என்று துணிந்து சொல்லலாம்.

சரித்திர காலம் என்று அழைக்கபடுகின்ற ஐயாயிரம் ஆண்டுகளின் வரலாற்றை நாம் ஓரளவு தெரிந்து கொள்ள அன்றைய மக்கள் ஏற்படுத்திய அரண்மனைகள் சமூதாய கட்டிடங்கள் கல்லறைகள் கூட பயன்படுகிறது. இவைகளை தாண்டிய சற்று தெளிந்த கால அறிவை ஆலயங்கள் நமக்கு நிறையவே தருகின்றன. ஒரு ஆலய அமைப்பை வைத்து அக்கால மக்களின் அறிவு கூர்மையை செயல்பாட்டு திறமையை மிக நன்றாகவே நாம் தெரிந்து கொள்கிறோம். வானளவு உயர்ந்து நிற்கின்ற கோபுரங்களை

**கடவுள் உருவாக்கிய மதம்**





பார்த்து அவைகள் கட்டபட்டிருக்கும் விதங்களை அறிந்து வியப்படைவதோடு மட்டுமல்லாது நம்மை விட நமது முன்னோர்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்ந்ததற்கான அறிகுறிகளையும் காண்கிறோம்.

மிக தொனமை வாய்ந்ததான சிந்து சமவெளி நாகரீகத்தில் கூட தகவல்களை தருவதில் பட்டயங்கள் முத்திரைகள் சிற்பங்கள் போன்றவைகளை விட கட்டிடங்களும் நீர் நிலைகளுமே அதிகமான உதிவி புரிகிறது. மனிதன் நாடோடிகளாக வேட்டையாடுபவர்களாக இருந்த காலத்தில் தங்களுக்கென்று நிலையான குடியிருப்புகளை ஏற்படுத்தி கொள்ளவில்லை. ஓரிடத்தில் நிலையாக இருந்து வேளாண்மை உள்ளிட்ட தொழில்களை கற்று அதன் மூலம் தனது வாழ்க்கை தரத்தை சிறிதளவு மேம்படுத்தி கொண்ட பிறகே மனிதன் முறைப்படியான வாழும் இடங்களை ஆரம்பித்தான்.

இப்படி தனக்கென்று ஒரு இருப்பிடம் இல்லாமல் வாழ்ந்த மனிதன் தனது வழிபாட்டுக்காக நிலையான ஒரு இடத்தை தேர்ந்தெடுத்திருப்பான் என்று கனவிலும் நினைக்க முடியாது.

தனது பயணம் நடைபெறும் இடத்தில் அது எந்தவையான இடமாக இருந்தாலும் பருவகால சூழலை அனுசரித்தே தனது வழிபாட்டு முறையை அமைத்து கொண்டு அதற்கிசைய வாழ்ந்திருப்பான் இதனால் அவனுக்கு வழிபாடு செய்வதற்காக நிரந்தரமான இடம் தேவைபட்டிருக்காது. தனக்கென்று ஒரு வீடு மனை என்று அமைத்து கொண்ட பிறகு கூட ஆதிகால மனிதன் தனிவொரு வழிபாட்டு கூடத்தை அமைத்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

மனிதனின் தொன்மையான குறிப்புகள் என்று கருதபடுகின்ற வேதங்கள் நான்கிலும் கூட ஊர் பொது மையத்தில் வழிபாடுகள் நடந்ததாக கூறபட்டிருக்கிறதே தவிர சம்பிரதாய முறைப்படி ஒரு இடத்தில் வழிபாடு நடந்ததாக தெரியவில்லை அதாவது வேதகால மக்கள் தங்க ளுக்கென்று ஆலயங்களை அமைத்து கொள்ளவில்லை. ஆலயங்கள் அமைப் பதில் கூட அவர்கள் அக்கறைகொள்ள வில்லை. அப்போதைய வழிபாட்டு முறையில் புகழ்பெற்று விளங்கிய மிகபெரிய யாகங்கள் துவங்கி சிறியதான ஹோமங்கள் வரை ஊர் மைதானத்தில் அல்லது வயல்வெளியில் நடந்ததாகவே தெரிகிறது.

வேதகாலத்திற்கு பிறகு வருகின்ற இதிகாச காலங்களிலும் புராண காலங்களிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக சென்று ஞானிகளையும் முனிவர்களையும் தரிசனம் செய்தார்கள் என்பதை அறிய முடிகிறதே தவிர ஆலயங்கள் அமைத்தார்கள் அதற்கென்று தனிதிருவிழாக்கள் கொண்டாடினார்கள் என்பதை காணமுடியவில்லை. இதிகாசங்களில் கூட அழகான அரண்மனைகள் வீடுகள் பூங்காக்கள் நீர்நிலைகள் என்பவைகள் மன்னர்களாலும் மக்களாலும் உருவாக்கப்பட்ட தகவல் இருக்கிறதே தவிர ஆலயங்களை எழுப்பியதாக எந்த செய்தியும் பதிவு செய்யப்படவில்லை.

இதிகாச காலத்திலும் அதற்கு பிறகு வந்த சரித்திர காலத்திலும் சிறந்த வள்ளலாக



e-magazine
aanmeegamalar.com

கருதபடுபவன் மகாபாரத கர்ணன் இவன் செய்யாத தான தர்மங்கள் இல்லை ஏற்படுத்தாத தர்மசாலைகள் இல்லை. இவனை பார்த்தே பல மன்னர்களும் வணிகர்களும் தானம் கொடுப்பதில் ஆர்வம் காட்டினார்கள். ஆபத்தான நேரத்தில் ஒரு சிறிய வெல்ல துண்டை பரிசளித்தவனை கூட தர்ம பிரபு கர்ணனை போல இருக்கிறான் என்றே வறியவர்கள் வாழ்த்துவதிலிருந்து கர்ணனின் கொடை தன்மை என்னவென்று நமக்கு தெரியும். அத்தகைய சிறந்த வள்ளலான கர்ணன் கூட தனது வாழ்நாளில் எங்காவது ஒரு மூலையில் ஒரு கோவிலை கட்டினான் என்ற குறிப்பை கானமுடிய வில்லை.

இன்றுவரையிலும் உதாரான அரசாங்கமாக திகழ்வது ராமனின் அரசாட்சி காலமாகும். இந்த நாட்களில் நாடு முழுவதும் தர்மங்கள் மட்டுமே நிகழ்ந்ததாக சொல்லபடுகிறது. ராமன் மிகசிறந்த அவதார புருஷன் மட்டுமல்ல தன்னிகர் இல்லாத மன்னனாகவும் இருந்தான். தன்னைவிட தகுதியில் தாழ்ந்த அரக்கனையும் வேடுவனையும் வானரர்களையும் பறவைகளையும் கூட தனது உறவினராக ஏற்றுகொண்ட மாண்பு ராமனிடமே இருந்தது. அந்த ராமன் கூட தனது வாழ்நாளில் எந்த கோவிலையும் அமைத்ததாக தெரியவில்லை. அதற்காக ராமனையும் கர்ணனையும் நாத்திகர்கள் என்று சொல்லிவிட முடியுமா?

வரலாற்று கால மன்னர்களை விட தற்காலத்து வணிகர்களை விட ஆலயங்கள் எழுப்புவதற்கான அனைத்து வசதிகளும் இதிகாச காலத்து அவதார புருஷர்களுக்கு நிறையவே இருந்தது. ஆனாலும் அவர்கள் அப்படி செய்யாதற்கு என்ன காரணம் என்று சிந்திக்க வேண்டும். அக்காலத்து மக்களுக்கும் மன்னர்களுக்கும் தெய்வீகமான சிந்தனைகளை உருவாக்க வேண்டுமானால் அதற்கென்று தனிசின்னங்கள் தேவைப்படவில்லை காணும் பொருட்கள் ஒவ்வொன்றுமே இறைவனாகவும் இறைவனின் அம்சமாகவும் அவர்களுக்கு தெரிந்திருக்கிறது. அதனால் அவர்கள் மனதிற்கு எந்த இடம் உகந்த இடமாக தெரிந்ததோ அந்த இடத்தில் சர்வ சுதந்திரமாக இறை வணக்கத்தை செய்தார்கள். இது மட்டுமல்ல இறை வணக்கம் என்பது மனதிற்கும் இறைவனுக்கும் நடை பெறுகின்ற ஆலிங்கணமே தவிர பகட்டுக்காக நடக்கும் பகல்வேட கூத்துக்கள் அல்ல என்பதை தெளிவாக அறிந்து வைத்திருந்ததனால் ஆலயங்கள் அவர்களுக்கு தேவைப்படவில்லை.

இடி, மின்னல், மழையை பார்த்து அஞ்சி நடுங்கிய ஆதிகால மனிதன் இயற்கைய வழிபடுவதில் மட்டுமே குறியாக இருந்ததனால் அவனுக்கு புறக்கருவிகளாக எந்த சாதனமும் தேவைப்படவில்லை மரணத்தை பற்றிய அச்சம் விலக விலகவே இறைவனின் அருள் கடாச்சியம் அச்சம் தரக்கூடியது அல்ல அரவணைத்து செல்ல கூடியது எனவே அவரை மகிழ்விப்பதற்காக வழிபாடு நடத்துவோம் என்று துவங்கியது தான் இன்றைய மதமென்று சிலர் வாதிடுகிறார்கள். இவர்களின் கூற்றில் ஐம்பது சதவிகிதம் சரியானது என்றும் மீதம் உள்ளவகைகளை முற்றிலும் சரியானது என்று சொல்ல முடியாது.

காரணம் பயத்தின் காரணமாக இந்திய மதங்கள் தோன்றியிருந்தால் அவற்றில் இறைவன் கொடுக்கும் கடுமையான தண்டனைகளை

பற்றி அதிகமான வெளிப்பாடுகள் இருக்கும். இறைவன் வருகையை பற்றிய கொடூர அறி விப்புகள் நிறைந்திருக்கும். ஆனால் அப்படி எதுவும் இந்திய மதங்களில் இல்லை. வைதீக நெறியான சனாதன தர்மமும் சரி அதிலிருந்து தோன்றியதாக இருந்தாலும் கொள்கைகளாலும் கோட்பாடுகளாலும் வைதீக மார்க்கத்திற்கு சற்று மாறுபட்டதாக இருக்கின்ற ஜைனம், பௌத்தம், சீக்கியம் ஆகிய மதங்களும் சரி இறைவனை அன்பானாவனாக கருணையாளனாக அரவனைப்பவனாக வர்ணனை செய்கிறதே தவிர நீதி சொல்கின்ற ஒரு சிம்மாசனத்தில் அமர்ந்து தண்டனைகள் கொடுப்பவனாக காட்டவே இல்லை.

இயற்கையை பார்த்த அச்சத்தினால் இயற்கையின் மூலமாக இருக்கும் இறைவனின் பெயரிலும் அச்சமே ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் இயற்கையை பார்த்தோ இறைவனை பார்த்தோ பாரத புத்திரன் பயபட்டதாக சொல்ல முடியாது. காரணம் மழைவருவது எப்படி? இடி இடிப்பது எப்படி? என்பவைகளை நம்மை போலவே அவர்களும் விஞ்ஞான மனோபாவத்தில் அறிந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். இதற்கான ஆதாரங்கள் வேத, புராண, இதிகாச நூல்களில் நிறையவே கிடைக்கிறது.

இயற்கையை பார்த்த அச்சத்தினால் அவைகளை வணங்க இந்தியன் துணியவில்லை என்றால் பின் எதற்காக இயற்கை சக்திகளை அவன் வழிபட்டான் என்ற கேள்வி நியாயமாக தோன்றும். இதற்கான பதில்கள் வேதங்களில் மிக அழகாக கூறபட்டிருக்கிறது. கடவுள் ஒருவராக இருந்தாலும் உலகத்தில் நிகழ்கின்ற ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் அதிகாரிகளாக கடவுளின் பல்வேறு அம்சங்கள் செயல்படுவதாக நம்பினான். அதாவது அதிகாரம் பொருந்திய ஒரே மனிதர் ஜனாதிபதி மட்டுமே என்றாலும் அவரின் அதிகாரத்தின் வெளிப்பாடாக பிரதம மந்திரி துவங்கி ஊர் தலையாரி வரை இருப்பது போல இறைவனது அருள் சக்தியின் அதிகார பரவலாக வெவ்வேறு தேவதைகள் இருப்பதை சொல்லலாம். உணவு வழங்கும் பூமியின் இயக்கத்திற்கு ஒரு தெய்வம், உயிர்வாழும் காற்றை தருவது ஒருதெய்வம், அக்கினியாக நிற்பது ஒருதெய்வம், மழையாக கொட்டுவதும் ஒருதெய்வம் என்று வகைபடுத்தி வணங்கினார்கள். அந்த வணக்கம் பக்தியின் நன்றியின் வெளிபாடே தவிர அச்சத்தின் அடையாளம் அல்ல.

மழை தெய்வம் என்றால் அந்த மழையால் உருவாகும் அனைத்துமே தெய்வ அம்சம் பொருந்தியதாகும் அதனால் தான் ஆதிகால மக்களுக்கு காணுகின்ற பொருள் ஒவ்வொன்றுமே கடவுள் தன்மையை வெளிபடுத்துவதாக இருந்ததனால் இறைவனுக்கு என்று தனியாக அடையாளபடுத்தி காட்டவேண்டிய கோவில்கள் தேவை இல்லாமல் இருந்தது. காலம் செல்ல செல்ல மனித மனதில் எண்ணங்களும் ஆசைகளும் விருத்தி அடைய அவனது உணர்வுகளின் கூர்மை சிறிது தேய்த்து போக ஆரம்பித்த போதே நிலையான வழிபாட்டு கூடங்களை அமைக்க ஆரம்பித்தான். அதன் வளர்ச்சியே இன்றைய ஆலயங்கள்.

ஆரம்பத்தில் இயற்கையை வழிபட்ட மனிதன் அவனது கண்களுக்கும் கருத்துக்களுக்கும் அதிகபடியான தெய்வீக அதிர்வுகளை கொடுத்த மலைகள், மரங்கள் போன்றவற்றை பக்தி சிரத்தையோடு வணங்கினான். அப்படி அவன் வழிபாடு நடத்தியதன் தொடர்ச்சியாகவே இன்றைய மரங்களின் வழிபாடு வழி வழியாக நடந்து வருகிறது. சிவன், திருமால், சக்தி போன்ற தெய்வங்களை வழிபடுவதில் ஒரு மனிதன் எவ்வளவு அக்கறையோடும் ஈடுபாட்டோடும் இருக்கிறானோ அதே அக்கறையை மரங்களை வழிபடுவதிலும் செலுத்துகிறான்.

மரங்களை வழிபடும் மனிதர்கள் இன்று கூட இருக்கிறார்களா? அது இந்துமத வழிபாட்டு பிரிவுகளில் முக்கியமானதாக இன்றுவரை நீடிக்கிறதா? என்று சிலருக்கு தோன்றும். அவர்கள் ஆற அமர உட்கார்ந்து சிந்தித்து பார்த்தால் மரங்களை வழிபடும். தன்மையானது எந்த அளவு நமது வாழ்க்கையோடு பின்னி பிணைந்துள்ளது என்பதை புரிந்து கொள்வார்கள். அதற்காக நூலகங்களுக்கு சென்று பெரிய பெரிய ஆய்வு நூல்களை எடுத்து மண்டையை குடைந்து படிக்க வேண்டிய அவசியம் இல்லை. தாங்கள் வாழுகின்ற பகுதியையே சற்று உன்னிப்பாக கவனித்தால் போதும் மர வழிபாட்டின் முக்கியத்துவம் தெரிந்துவிடும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

e-magazine
aanmeegamalar.com



e-magazine
aanmeegamalar.com

விழுப்புரம் மாவட்டம் கள்ளகுறிச்சி வட்டத்தில் தோட்டபாடி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தின் அருகிலேயே பூண்டி, நைனார் பாளையம் போன்ற கிராமங்களும் உள்ளன. இந்த மூன்று கிராம மக்களும் ஒருங்கிணைந்து கன்னிமார் தேவதைகளுக்கு வழிபாடு நடத்துவார்கள். இதன் வழிபாட்டு முறை மிகவும் சிக்கலானது மூன்று கிராமங்களும் ஒன்று கூடி செய்தால் மட்டுமே செய்ய கூடியது என்பதனால் வருடா வருடம் நடப்பதில்லை சில நேரங்களில் பத்து இருபது வருடங்கள் சென்று கூட நடைபெறும்.

கன்னிமார் தேவதைகளை வழிபடுகின்ற இடம் தொட்ட பாடி கிராமத்தின் கிழக்கு பகுதியல் அமைந்துள்ளது. இந்த பகுதி தமிழக வனத்துறைக்கு சொந்தமான பகுதி. அதிஷ்டவசமாக இன்றைய காலத்தில் கூட பல மரங்கள் அங்கு இருக்கின்றன. அந்த வனத்திற்குள் தான் வழிபாடும் நடக்கும். தேவதைகளுக்கு பூஜைகள் செய்கின்ற பகுதியில் சிலைகளோ திரிசூலம் வேல் போன்ற சின்னங்களோ கிடையாது. ஒரு பெரிய கள்ளி செடி மட்டுமே இருக்கிறது. அதற்கு பக்கத்தில் பெரிய கல் ஒன்று கிடக்கிறது. அந்த கல்லை வேறொரு கல்லால் அடித்தால் கணீர் என்ற வெண்கல மணியின் ஓசை வரும். அதனால் அந்த கல்லை. கிராம மக்கள் கிணீர்கல் என்றே அழைக்கிறார்கள்.

கள்ளி செடியும் கல்லும் இருக்கின்ற இந்த பகுதிக்கு விறகு பொறுக்குவதற்கு கூட பெண்கள் செல்ல மாட்டார்கள் பூஜை நடைபெறுகின்ற காலத்தில் கூட பெண்களுக்கு அங்கே அனுமதி இல்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் அங்கு வழிபட படுவது கன்னிமார் என்ற பெண் தேவதை வழிபடும் தெய்வமே பெண்ணாக இருக்கும் போது வழிபடுவதற்கு பெண்களுக்கு அனுமதி இல்லை அந்த அளவு கன்னிமார் தெய்வம் துஷ்டதெய்வமாக அந்த பகுதியில் கருதபடுகிறாள். காட்டின் எந்த மூலையிலிருந்து பார்த்தாலும் உயரமான அந்த கள்ளி செடி தெளிவாக தெரியும். தூரத்திலிருந்து பார்த்து பெண்கள் கன்னத்தில் போட்டு வணங்கி கொள்ள வேண்டியது தான். பெண் தெய்வத்தை பெண்கள் வணக்குவதை தடை செய்வது நியாயமா? முறையா? என்ற ஆராய்ச்சிக்கு இப்போது நாம் போக வேண்டிய அவசியம் இல்லை. மரத்தை இறைவனின் அம்சமாக வழிபடுகிற தன்மை இன்றும் இருக்கிறது என்பதை சுட்டி காட்டவே இதை இங்கே தெரிவித்தேன்.

மரங்களை வழிபடுவது நமது தமிழ்நாடு முழுக்க இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். வேப்பமரத்திற்கு பாவாடை கட்டி வழிபடுவதும் ஓங்கி வளர்ந்த ஒற்றை பனைமரத்தில் முனிஸ்வரனை வழிபடுவதும் நாம் அறியாதது அல்ல. அதை விட்டு விட்டு அரசமரத்தடி விநாயகர் வன்னிமர சிவன் துளசிமாட கிருஷ்ணன் போன்ற வழிபாடுகளை ஆழ்ந்து நோக்குவோம் என்றால் மர வழிபாட்டின் தெளிவு நமக்கு பிறக்கும். இதுவரை ஆதிகால வழிபாட்டு முறையின் ஒரு பகுதியான மர வழிபாட்டின் சிறு கூரை மட்டுமே பார்த்தோம். இனி அதன் ஆழமான விபரங்களை பார்ப்போம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# வெள்ளைக்கார நீதிபதியிடம் சாட்சிசொன்ன முருகன்

18ஆம் நூற்றாண்டின் அந்திம காலத்தில் தேவகோட்டை பக்கம் பழனியப்பச் செட்டியார் எனும் முருகப் பக்தர் ஒருவர் இருந்தார்.

இவர் மணப்பாறை சந்தைக்கு மாடு வாங்கச் சென்றார், அன்று, பரமக்குடி, மணப்பாறை, மேலப் பாளையம் எனப் புகழ்பெற்ற மாட்டுச் சந்தைகள் இருந்தன.

தினமும் ஆயிரக்கணக்கான மாடுகள் வந்த சந்தைகள் அவை.

அப்படி மணப்பாறைக்கு சென்று அந்திம பொழுதில் மாடுவாங்கிய பழனியப்ப செட்டியார் அதை ஓட்டி வரும் வழியில் விராலிமலைமுருகன் கோயில் அருகில் இருட்டி விட்டதால் தங்கி விட்டார்.

மரத்தில் மாட்டை கட்டிப் போட்டு விட்டு சற்று தள்ளி அவர் "முருகா" எனச் சொல்லியபடி படுத்துக் கொண்டார்.

முருகப் பெருமான் காவலிருப்பான் என்பது அவர் நம்பிக்கை.

ஆனால், நள்ளிரவில் மேலமலை குறவன் ஒருவன் வந்து அவருக்குத் தெரியாமல் மாட்டை அவிழ்த்துச் சென்று விட்டான்.

காலை கண்விழித்த பழனியப்ப செட்டி மாடு இல்லாததால் பதறினார்.

அங்குமிங்கும் தேடியவர் மாட்டின் சாணம் கால் தடமெல்லாம் கண்டு ஓடி ஓடி தேடியதில் மாடு குறவன் வீட்டில் இருப்பது தெரிந்தது.

அவனோ இது தன் மாடு எனச் சாதித்தான்.

அவனுக்கு இதுவே தொழிலாக இருந்தது.

வேறு வழியின்றி செட்டியார் நீதிமன்றம் நாடி னார்.

குறவனோ தேர்ந்த திருடன் என்பதால்...

"ஐயா, நான் இந்த மாட்டை அவிழ்த்து விடுகின் றேன்... அது அவர் வீட்டுக்குச் சென்றால் அவர் மாடு என ஒத்துக் கொள்கிறேன்.

இல்லை... அவர் அந்த மாட்டின் இரகசிய அங்க அடையாளம் ஒன்றைச் சொல்லட்டும்... சரியாக இருந்தால் கொடுத்து விடுவேன்.

இல்லை... சந்தையில் இருந்து சாட்சி விற்ற மாட்டுக்காரனை அழைத்து வரட்டும்... நான் கொடுத்து விடுகின்றேன்."

செட்டியார் தலையில் கை வைத்து அமர்ந்து விட்டார். காரணம், அது



ஆன்மிகமலர்.காம்
e-magazine
aanmeegamalar.com

புதுமாடு. அவர் வீடே அறியாதது. இதனால் அது அவிழ்த்து விட்டாலும் அவர் வீடு செல்லாது.

இரண்டாவது...

அந்த மாட்டை... சில மணி நேரம் முன்னாடி தான் வாங்கியிருந்தார். அதன் அங்க அடை யாளம் நிறமெல்லாம் பெரிதாக அவர் மனதில் பதியவில்லை.

மூன்றாவது...

அது... தினமும் ஆயிரக்கணக்கில் மாடு வரும் பெரிய சந்தை. சுற்றும் தரகர்கள் ஏராளம்.

யார் யாரிடம் வாங்கினார், விற்றார் என்பதெல் லாம் அறிய வாய்ப்பில்லாத விஷயம். சாட்சி அங்கே ஏதுமில்லை என்பது குறவனுக்கு சாதகம்.

நீதிமன்றமோ சாட்சியின்றி ஏதும் செய்ய இயலாது.

“உமக்கு சாட்சி உண்டா !?” என ஆங்கிலேய நீதிபதி கேட்டபோது...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்

மனமுடைந்த பழனியப்பச் செட்டி சொன்னார். “மலையில் இருக்கும் விராலிமலை முருகனே சாட்சி, நான் அவனை நம்பித்தான் அங்கே மாட்டைக் கட்டினேன் !”

நீதிபதி சட்டப்படி தீர்ப்பை எழுத தயாரான போது தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

எங்கிருந்தோ பறந்து வந்த மயில் ஒன்று நீதிபதி முன்னால் நின்று தோகை விரித்து ஆடி யது. அதனை அனைவரும் கண்டார்கள்.

ஆனால், அந்த மயில் மேல் முருகன் இருந்தது, நீதிபதி கண்ணுக்கு மட்டும் தெரிந்தது.

நீதிபதி எழுந்து நின்று மயிலையே பார்த்துக் கொண் டிருந்தார்.

மயில் உடனே திரும்பிச் சென்றது.

அவையே அந்த அதிசயம் கண்டு மௌனித்து நின்றது. யாரிடமும் எவ்வித வார்த்தைகளும் இல்லை.

நீதிபதி, தமது தீர்ப்பை எழுதினார், எல்லா வாய்களும் மூடி அவரையே நோக்கின.

பழனியப்பச் செட்டிக்கு என்ன நடக்கின்றது என்பதே தெரியவில்லை. நீதிபதி, தமது தீர்ப்பை வாசித்தார்.

“இங்கு மயிலே வந்து சாட்சி சொன்னது, நான் அந்த மயில் மேல் இருந்த முருகப் பெரு மானைக் கண்டேன், இந்தச் சாட்சியினை ஏற்றுக் கொண்டு அந்த மாடு செட்டியாருக்கு உரியது எனத் தீர்ப்பளிக்கின்றேன் !”

குறவன் தண்டனை பெற்றான்.

பசுவினை பெற்றார் செட்டியார்.

பழனியப்பச் செட்டிக்கு மனமெல்லாம் முருகனே நிறைந்திருந்தார். அந்த நன்றிப் பெருக்கில் அந்த அதிசயத்தில் மனம் நெகிழ்ந்தவர் “முருகா” என்றபடி அந்தப் பசுவினை விராலிமலை கோயிலில் கட்டி வைத்து விட்டுத் திரும்பினார்.

அது, கோயில் பசுவானது.

பின், செட்டியாரின் தொழில்கள் பெரிதாக வளர அந்தப் பசுவோடு நிறைய் பசுக்களை சேர்த்து கோசாலை அமைத்துக் கொடுத்தார்.

அந்த கோசாலை இன்றும் உண்டு.

இப்படி மயிலே வந்து சாட்சி சொன்ன அதிசயத் தை முருகன் விராலி மலையில் இருந்து செய்தார் அந்த அற்புதக் காட்சியினை கிறிஸ்தவ ஆங்கில நீதிபதி எழுதிய சாட்சி இன்றும் உண்டு.



ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

வெளியிடும்

# மாத காலண்டர்

## 3 காலண்டர் 100 ரூபாய்

இலவச டெலிவரி







தமிழில் இதுவரை யாரும் வெளியிடாத வகையில்,
பஞ்சாங்க குறிப்புகள், நல்லநேரம், அஷ்டமி, நவமி, பௌர்ணமி
பிரதோஷம், பஞ்சமி, அமாவாசை (துவக்கம் முதல் முடிவுவரை),
வங்கி விடுமுறை தினங்கள், அரசு விடுமுறை தினங்கள்,
முக்கிய திருவிழாக்கள் போன்ற தகவல்களுடன்

## மினி பஞ்சாங்கமே உள்ளடக்கிய மாத காலண்டர்,

ஒவ்வொரு மாதத்திற்கும் பெரிய அளவிலான
அழகிய தெய்வபடங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

## ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டிய பொக்கிஷம்

கீழே உள்ள எண்ணிற்கு Paytm Gpay PhonePe PayPal UPI செய்து
ஸ்கீரின் ஷாட்டுடன் உங்கள் முழு முகவரியை
வாட்சப்பில் அனுப்பி வைக்கவும்... 9994162182
8825844033

வெளிமாநிலம், வெளிநாட்டு வாசகர்கள்
கொரியர் கட்டணம் தனியாக செலுத்த வேண்டும்

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

தரமான பொருளுக்கு அதிக தேவை இருக்கும்...
உங்கள் தேவைக்கு முந்துங்கள்

தகவல்களுக்கு: 9994162182/ 9994323622/ 9444228203

# இருமுடியை முதலில் சுமந்த ஐயப்பன்

# நெய்தேங்காயின் ரகசியம்



ஐயப்பன் கோவிலில் நெய்யால் ஐயப்பனுக்கு அபிஷேகம் நடக்கும். ஆனால் தனி நெய்யை யோ, தனி தேங்காயையோ நிவேதனம் செய்யமாட் டார்கள். தேங்காய்க்குள் நெய் ஊற்றி நெய் தேங்காயையே நிவேதனமாக்கினார்கள்.

முக்கண் கொண்ட தேங்காய் சிவனை ஞாபகப்படுத்தும். பசு நெய் கோபாலனாகிய மகா விஷ்ணுவை நினைவுப்படுத்தும். சிவன், விஷ்ணு இருவருடைய அருள் கதிரொளியின் சக்தியாக அவதரித்தவர் ஐயப்பன். இதனால் சிவவி ஷ்ணு வடிவமான நெய் தேங்காயை அவருக்கு நிவேதனம் செய்கின்றனர்.

ஐயப்பனுக்கு காணிக்கையாய் நெய் கொண்டு செல்வது காலம் காலமாய் இருந்து வருகிறது. இந்த வழக்கம் ஏன் ஏற்பட்டது தெரியுமா?

பந்தள மன்னனின் மனைவி வயிற்று வலியால் அவதிப்படுவதாக பொய்யுரைத்தாள். தாய்க்கு புலிப்பால் கொண்டு வர காடு நோக்கி புறப்பட்டான் ஐயப்பன்.

தந்தையான பந்தள மன்னன் மிக வருத்தத் துடன் மகனை வழியனுப்பும்போது, காட்டில் இருக்கும்போது உண்ணக்கூடிய உணவுகள் பல நாட்கள் கெட்டுப்போகாமல் இருக்க நெய்யில் தயாரித்த சில உணவு வகைகளை ஒரு முடி யாக கட்டினார். அதே சமயம், சிவபக்தனான பந்தள மன்னன், முக்கண்ணனான சிவனின் அம்சம்போல் ஒரு தேங்காயை மற்றொரு முடியில் கட்டிக் கொடுத்தார்.

அந்த இருமுடிகளையும் ஏந்திய சிறுவன் மணி கண்டன், புலிப்பால் கொண்டு வர காட்டுக்கு சென்றான். இருமுடியை முதன்முதலில் தலையில் ஏற்றியது ஐயப்பன் என்று புராணம் கூறுகிறது.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகமலர் .காம்

இவ்வாறு இருமுடியை தலையில் தாங்கி ஐயப்பனை வழிபடும் முறை நாளடைவில் நிலைத்துவிட்டது.

சபரிமலை ஐயப்பன் சிலை கடந்த 1800ஆம் ஆண்டு வரை ‘தாரு சிலை” எனப்படும் மரத்தால் செய்யப்பட்ட சிலையாக தான் இருந்தது. அதன் காரணமாக அப்போது வரை சுவாமிக்கு நெய் அபிஷேகம் நேரடியாக செய்யும் வழக்கம் இல்லாமல் இருந்தது.

ஆன்மிகமலர்

இதனால் ஐயப்ப பக்தர்கள் கொண்டு செல்லக்கூடிய நெய்யை அங்குள்ள நெய்த்தோணியில் கொட்டிவிட்டு வரும் பழக்கம் இருந்தது.



தற்போது நேரடியாக ஐயப்ப சுவாமிக்கு நெய் அபிஷேகம் செய்யப்பட்டு அந்த பிரசாதத்தை பக்தர்கள் வீட்டுக்கு கொண்டு வருகின்றனர்.

## நெய் தேங்காய் சுமந்து செல்வதற்கான காரணம்

தன் அவதார காரணம் பூர்த்தி பெற்றதால் தான் சபரிமலையில் தவமிருக்கப் போவதாகவும், தன்னை தரிசிக்க வேண்டுமானால் அங்கு வருமாறும் ஐயப்பன் கூறினார்.

பந்தள மன்னன், மணிகண்டா! நீ காட்டுக்குள் குடியிருக்க போவதாய் சொல்கிறாய். நாங்கள் உன்னை காண வேண்டும் என்றால் மலைகளை கடந்து வர வேண்டும். வயதான நான் உன்னை காண எப்படி வருவேன்? என்றார். அதற்கு மணிகண்டன் உங்களுக்கு ஒரு கருடன் வழிகாட்டும். அந்த வழிகாட்டுதலின்படி நீங்கள் எனது இடத்திற்கு வந்துவிடலாம் என அருள்பாலித்தார்.

அதன்படி ஆண்டுக்கு ஒருமுறை ஐயப்பனை காண பந்தள மன்னன் மலைக்கு செல்வார். மகனை காண செல்லும்போது ஐயப்பனுக்கு பிடித்தமானவற்றை எல்லாம் எடுத்து செல்வார். நெய் இலகுவில் கெட்டு போகாத ஒன்று. எனவே நெய்யில் செய்த பலகாரங்களை கொண்டு செல்வார்.

மேலும் நெய்யை தேங்காய்க்குள் ஊற்றி கொண்டு சென்றால் இன்னும் பல நாள் கெடாமல் இருக்கும். பந்தள மன்னன், ஐயப்பனை காண நடந்தே மலை ஏறுவார். மலையை அடைய பல நாட்களாகும். எனவே கெட்டுப் போகாத நெய்யை எடுத்துச் செல்லும் வழக்கம் உருவானது.

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 180 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்



## மலாய்மந்திர்

# தில்லியில் பிரம்மாண்ட முருகன் கோவில்

மலை மந்திர் (தமிழில் மலைக் கோயில்) எனப் பிரபலமாக அறியப்படும் உத்தர சுவாமி மலைக் கோயில், புது டெல்லி தென்மேற்கு பகுதி, ராமகிருஷ்ணாபுரம், பிரதான பாலம் மார்க்கில் அமைந்துள்ள ஒரு இந்துக் கோயில், சுவாமிநாத ஸ்வாமிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கும்பகோணம் அருகே உள்ள ஸ்ரீ தட்சிண சுவாமிமலை போன்று வடக்கில் உள்ள இந்த மலைமந்திர் "உத்தர சுவாமிமலை"யாக பக்தர்களால் போற்றப்படுகிறது. பிரம்மஸ்தான பிரதிஷ்டை செய்யப்பட்ட ஒரே கோவில் இதுதான்.

தில்லி வாழ் தமிழர்கள் தமிழ் இந்தி இரு மொழிகளையும் இணைத்து 'மலை மந்திர்' என்று கூறுவதைக் கேட்ட தமிழர் அல்லாதவர்கள் இதை 'மலாய் மந்திர்' என்று உச்சரிக்க ஆரம்பித்து, அதுவே நிலைத்து விட்டது. இக்கோயில் பாரம் பரிய சோழர் கட்டிடக்கலை பாணியில் கட்டப் பட்டது.



டெல்லி
தியாகராஜன்

தொன்னூறு அடி உயரமான மலையின் உச்சி யில், ராமகிருஷ்ணாபுரம் கண்டும் காணாத வகை யில் அமைந்துள்ளது.

மூலவர் கிழக்குத் திசையை நோக்கி இருப்ப தால், சூரியக் கிரணங்கள் குறிப்பிட்ட நாட்களில், சுவாமிநாத ஸ்வாமி மீது படுகின்றன. தமிழகத்தில் காவிரிக்கருகில் குடிகொண்டிருக்கும் சுவாமி நாதன், தில்லியில் தன் மாமன் விளையாடிய யமுனை நதியை நோக்கிய வண்ணம் குன்றின் மீது நின்று புரியும்

அதிசயத்துக்கு அளவே இல்லை.

விநாயகர், மீனாக்ஷி, சுந்தரேசர், இடும்பன் மற்றும் நவக்கிரகங்களுக்கு தனித்தனி சந்நிதிகள், சிற்ப கலா மண்டபம், ஆதிசங்கரர் பிரார்த்தனைக் கூடம் போன்ற பலவும் அமைக்கப்பட்டுள்ளது. குன்றின் மேலுள்ள விஷ்ணு துர்கை சந்நிதியில் செவ்வாய்வெள்ளி தினங்களில் நடக்கும் ராகு கால பூஜையில், வட இந்தியர்களும் திரளாக வந்து கலந்து கொள்கிறார்கள்.

சிறப்பு தினங்களில் சுவாமியை மலை மேல் ஊர்வலமாகத் தூக்கிச் செல்வது வழக்கமாக உள்ளது. மூலவரைத் தரிசிக்க படியேறிச் செல்லும் வழியில் நாகர் சந்நிதி அமைந்துள்ளது. கோயில் கட்டுவதற்கு முன்பாக ஒரு நாள் குன்றின் மேல் தோன்றி பக்தர்கள் காண விளையாடிவிட்டு, குன்றினுள் சென்று மறைந்துவிட்ட நாகத்தின் நினைவாக இந்த நாகராஜா சந்நிதி அமைக்கப்பட்டதாம்.

குன்று கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில் சிறியதாக இருந்த அரசமரம், கிளை பரப்பி இன்றளவும் கம்பீரமாக நிற்பதை இடும்பன் சந்நிதிக்கருகில் காணலாம். மூலவரின் சாந்நித்யம் கோயிலில் நிறைந்துள்ளது. விநாயகர் சந்நிதிக்குப் பின்புறம் ஒன்பதரை அடி உயரத்தில் அமைந்துள்ள மீனாக்ஷிசுந்தரேசர், வள்ளிமுருகன் ஆகியோரின் திருமணக் கோலங்கள் மிக அழகிய சிற்பங்களாக வடிக்கப்பட்டு பக்தர்களை ஈர்க்கிறது.

உத்தர சுவாமிமலையில் நடக்கும் மிகப் பெரிய விழா – கந்த சஷ்டி விழாவாகும். தில்லி வாழ் தமிழர்கள் அனைவரும் ஒன்று கூடி நடத்தும் இப் பெரிய விழா தவிர தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், மகா சிவராத்திரி, நவராத்திரி, திருக்கார்த்திகை போன்ற விழாக்களும் வெகு சிறப்பாக நடக்கின்றன. கார்த்திகை மாதத்தில் நுழைவாயிலில் இருந்து மலை உச்சிவரை ஏற்றப்படும் தீபங்களின் அழகைக் காணும்போது,

குன்றெங்கு இருந்தாலும்
சென்றங்கு அருள்பவனே
என்றென்றும் எம்மனதில்
குன்றாது நிற்பவனே
ஆறுமுக ஆண்டவனே!

என்னப்பன் ஆறுமுக ஆண்டவனே! என்று நாமும் நித்யம் பாடுவோம்.




டில்லியில் அனைத்துத் தமிழர்களாலும் அறியப் பெற்றவர், உத்தர சுவாமி மலை ஆலயத்தை நிறுவியதில் முக்கியப் பங்காற்றியவர் மற்றும் ஆலய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றிய காலஞ் சென்ற “ஸ்வாமிநாத கைங்கர்ய மணி” திரு எஸ். பட்டாபிராமன் அவர்களின் மகத்தான இறைப்பணி வணங்கத்தக்கது.

செல்லும் வழி:

வசந்த் விஹார் மெட்ரோ நிலையத்தில் இருந்து 3.2 கி. மீ. தொலைவில் உள்ளது. கோவில் நேரம் காலை 6.30 11.00 மணி மாலை 5.30 9.00 மணி

தொடர்புக்கு: 01126175104, 011350320425

–டெல்லி தியாகராஜன்
9868423215



e-magazine
aanmeegamalar.com

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர் மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
180 க்கும் மேற்பட்ட
இதழ்களை




aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.



# திருமண தடைநீக்கும் திருத்தலம்



கும்பகோணத்திலிருந்து சுமார் முப்பது கீ.மீல் கோகிலாம்பாள் சமேத ஸ்ரீ உத்வாகநாத சுவாமி திருக்கோவில் அமைந்துள்ளது. பார்வதி தேவி பரத்வாஜ முனிவரின் மகளாக, யாகத்தில் உதித்து, தவம் இருந்து, உரிய வயதில் மணமகன் கல்யாண சுந்தரர் கை பிடித்த தலம் திருமணஞ் சேரி. சிவனை மணக்க வேண்டிய பார்வதி, பசுவாக மாறி பூலோகம் வர, மகாவிஷ்ணுவும் உடன் வந்ததாக கூறப்படுகிறது.

முனிவரின் மகளாக யாக குண்டத்தில் தோன்றி தேவி அழகே உருவாக கோகிலாம்பாளாக வளர்ந்து வருகிறாள். தன் மகளை மணக்க வரும் சிவன் ஆண் அழகராக வர வேண்டும் என முனிவர் பிரார்த்திக்க, அவர் வேண்டுதல்படி சிவன் கல்யாண சுந்தர மணமகனாக வந்து தேவியின் கரம் பற்ற திருமணம் நடக்கிறது.

உத்வாகநாதர் அருள்வள்ளல், யாழ்மொழியாள் பர்வதசுந்தரியை மணந்து, ரதி, மன்மதனுக்கு அருள் புரிந்த இடம். முதலாம் குலோத்துங்க சோழன், பராந்தக சோழன், செங்கமாதேவியால் கட்டப்பட்ட ஆயிரம் வருடத்துக்கு முற்பட்ட ஆலயம்.

கல்யாண கோலத்தில் அருளும் கோகிலாம் பாள் சமேத கல்யாண சுந்தரேஸ்வர உற்சவமூர்த் தங்கள் அத்தனை அழகு. கல்யாண மண்டபத் தில் தினம் நடக்கும் தெய்வ திருமணத்தில், மணமாலைக்கு காத்திருக்கும் ஆண், பெண்கள் நல்ல துணை வேண்டி பூஜையில் கலந்து கொண்டு மணமாலை சாற்றி பலன் அடைகிறார்கள். மணம் முடிந்ததும் தம்பதி சமேதராக வந்து நன்றி செலுத்தி செல்கிறார்கள்.

அப்பர் மற்றும் சம்பந்தரால் பாடல் பெற்ற தலம். செல்வ கணபதியை வணங்கி, சுவாமி அம்பாளை தரிசனம் செய்து, கல்யாண வரம் அருளும் இந்த பழமையான பாடல் பெற்ற திருக்கோவிலை வணங்கி, கோகிலாம்பாள் சமேத கல்யாண சுந்தரர் அருளை பெறுவோம்!!!

– ஆர்.சுபத்ரா ரங்கநாதன்
Hyderabad-500 036. Telengana

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

# கடல் அலைகளை அடைத்தருளிய ஆதி ஜெகந்நாதர் அடைத்தருளிய

e-magazine
aanmeegamalar.com

இம்மண்ணுலகில் சத்தியத்தையும், தர்மத்தையும் நிலைநாட்டிட, அந்தப் பரந்தாமனே எடுத்த அற்புத அவதாரம்தான் ஸ்ரீ இராமச்சந்திர பிரபு.

ஸ்ரீ இராமர், இராவணனை வதம் செய்ய இலங்கைக்குச் செல்லும் முன்பு தென்னாட்டின் பல இடங்களில் தெய்வ வழிபாடுகளை செய்துள்ளார். அதோடு, பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்.

அப்படியாக தென்னாடு வந்த ஸ்ரீ இராமபிரான், முதலில் உப்பூரிலே கணபதியை ஸ்தாபித்து வழிபடுகின்றார்.

அதன்பின்னர், குல குரு வசிஷ்ட மகரிஷியின் ஆலோசனைப்படி பிதுர் கடன்களை செய்ய உசிதமான, பராசக்தியின் அக்குள் பகுதி விழுந்த வீரசக்தி பீடமாகத் திகழும் தேவிப்பட்டிணத்தை அடைந்து, அன்னை உலகநாயகியை வணங்கி, வழிபட்டு, அன்னையின் திருவருளைப் பெற்று, பின்னர் கடற்கரையில் முறையாக பிதுர் கடன்களையும் செய்தார். கடலில் நவபாஷாணத் தால் ஆன நவக்கிரகங்களை ஸ்தாபிக்க எண் ணம் கொண்டார்.


ஆனால் அங்கோ சமுத்திரத்தின் அலைகள் ஆக்ரோஷமாக இருப்பதைக் கண்டு தயங்கி நின்றார். பின்னர் அங்கே கரையில் ஆதியாக வீற்றிருந்து அருளும் ஸ்ரீஆதி ஜெகந்நாத பெரு மாளை மனதில் நினைத்து வழி படுகின்றார்.

பரந்தாமனின் மறு உருவமே ஸ்ரீஇராமர் என்றபோதிலும், மனிதனாகப் பிறப்பெடுத்தால் மகாவிஷ்ணுவை சரணடைய வேண்டும் என்கிற உயர்ந்த தத்துவத்தை உலகோருக்கு உணர்த்திக் காட்டினார்.

பின், ஆதி ஜெகந்நாதரின் பேரருளால் முன்னம் எழும்பியப் பேரலைகள் கடலுக்குள் பின்வாங்கிச் சென்றன.

கள்ளழகனின் கருணையால் கடலில் இறங்கிய கோதண்டராமர், முறைப்படி நவபாஷாண நவ கிரகங்களை நிறுவி, நயம்பட பூசனைப் புரிந்தார். நம்பிக்கையோடு இலங்கையை நோக்கி நடை போட்டார்.

பொங்கிப் பெருகி வந்த அலைகளை அடைத்தருளியதால், இங்கு ஸ்ரீமந்நாராயணர் கடலடைத்த ஸ்ரீ ஆதி ஜெகந்நாதப் பெருமாள் என்று போற்றப்படுகின்றார்.













தேவிபட்டிணம் கடற்கரையில் ஸ்ரீ இராம தேவி பூதேவி உடனான கடலடைத்த ஸ்ரீஆதி பிரானின் கரங்களால் ஸ்தாபிக்கப் பட்ட நவக் கிரகங்களை வணங்கி, வழிபட்டு, பின்னர் சற்று தூரம் நடந்தால்... விமானத்துடன் கூடிய பெருமாள் கோவில் காணப்படுகின் றது.

முதலில் முன்மண்டபத்தில் பலி பீடம் மற்றும் பெரிய திருவடிகளான ஸ்ரீ கருடாழ்வார் தரிசனம்.

மகாமண்டபத்தின் வெளிப்புற சுவற்றில் ஸ்ரீ ஆஞ்சநேயர் அருள் பாலிக்கின்றார். பின், நேராக அர்த்தமண்டபம் அடைந்து, ஸ்ரீ


மோ.கணேஷ்

ஜெகந்நாத பெருமாளைக் கண்டு பரவசம் அடைகின்றோம். தனது மேலிரு கரங்களில் சங்கு சக்கரம் ஏந்தி, கீழிரு கரங்களில் அபய வரதம் காட்டி, பெரியதொரு திரு மேனியராக, அமர்ந்தவண்ணம் அருட்சேவை சாதிக்கின்றார்.

உற்சவ மூர்த்தங்களாக ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ சுதர்சனமூர்த்தி உள்ளனர். நடுவே அன்னை சீதாபிராட்டி மற்றும் இளவல் லக்ஷ்மணரோடு திவ்ய தரிசனம் அளிக்கிறார் ஸ்ரீ இராமச்சந்திர



மூர்த்திகள். அற்புத தரிசனம். ஆனந்தப் பரவசம்.

ஆலய வலம் வருகையில் ஆண்டாளைத் தனிச் சன்னிதியில் தரிசிக் கின்றோம். ஒரே திருச்சுற்றினைக் கொண்டுள்ளது ஆலயம். ஸ்ரீ விமானம் காண்போரைக் கவர்ந் திழுக்கிறது.

பாண்டிய மன்னர்களின் கலைநயம் ஆலயமெங்கும் பிரதிபலிக்கின்றது.

தல தீர்த்தமான சக்கர தீர்த்தம் ஆலயத்தின் எதிரே அமைந்துள்ளது.

பாஞ்சராத்ர ஸ்ரீ வைஷ்ணவ முறைப்படி தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகின்றது. அனேக வைஷ்ணவ சம்பிரதாயங்களும், விசேடங்களும் சிறப்புற நடத்தப்படுகின்றன.

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இவ்வாலயம் தினமும் காலை 7 மணி முதல் மதியம் 11 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரையும் திறந்திருக்கும்.

இந்த தேவிபட்டிணத்தில் கடலடைத்த பெரு மாளோடு, நவபாஷாண நவகாரகங்கள், ஸ்ரீ திலக்கேஸ்வரர் ஆலயம் மற்றும் சக்தி பீடமான ஸ்ரீ உலகநாயகி அம்மன் ஆலயம் ஆகியன மிக வும் பிரசித்தம்.

ஆடி அமாவாசையில் இங்கு இலட்சக் கணக்கானோர் வந்து பிதுர் வழிபாடுகள் செய் வது மிகவும் பிரபலமாகும்.

புதுக்கோட்டை இராமேஸ்வரம் பேருந்து சாலையில் சுமார் 115 கிலோ மீட்டர் தொலைவிலும் இராமநாதபுரம் நகரிலிருந்து 16 கிலோமீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது தேவிபட்டிணம்

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்புக்கு: 9789156179.






e-magazine
aanmeegamalar.com




# Aanmeega Malar

## English magazine

## coming soon...

## covering all spiritual information

For more details
9444228203
(9 AM to 4 PM)

**Those who want to send spiritual messages please send them along with their photo and phone number**

# நொய்டா முருகன் கோவிலில் 2 நாட்கள் ஸ்ரீ ஐயப்பன் பஜனை



e-magazine
aanmeegamalar.com

ஒவ்வொரு ஆண்டும் போல், இரண்டு நாட்கள் விழா, இந்த ஆண்டு 'ஐயப்ப சீசன்' போது, பஜனைகளுடன், ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலில், செக்டார் 62, நொய்டாவில் நடைபெற்றது. நவம்பர் 16, சனிக்கிழமை அன்று, வேதிக் பிரச்சாரர் சன்ஸ்தான் (கூஷிறிஷி), மற்றும் ஙிபிணிலி ஐயப்ப பூஜை சமிதியுடன் இணைந்து, ஸ்ரீ மஞ் சப்ரா மோகன், குழுவினர் வழங்கிய ஐயப்பன் பஜனைகளுடன் சாஸ்தாப்ரீதியை நடத்தியது. தில்லி தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.ஆர்.முகுந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அனைத்து கலைஞ சர்களையும் கவுரவித்தார். பாஜக டெல்லி (தமிழ் பிரிவு) தலைவர் ஸ்ரீ முத்துசாமியும் பூஜைகளில் பங்கேற்றார். வி.பி.எஸ்., சார்பில், தலைவர்: ரவி பி.சர்மா, சிறப்பு விருந்தினர்களை கவுரவித்தார்.



இரண்டாம் பஜனை நிகழ்ச்சி, ஞாயிற் றுக்கிழமை, ஹம்சத்வானி பஜன் மண்டலி, நவம்பர் 24 ல் நடந்தது. இந்த நிகழ்ச்சியை சகோதரர்கள்: ஸ்ரீதர் ஐயர், சங்கரநாராயணன், வெங்கடரமணன் மற்றும் குடும்பத்தினர், வேதிக் பிரச்சார் சன்ஸ்தானத்துடன் இணைந்து ஏற்பாடு செய்தனர். ஸ்ரீ மிருத்யுஞ்சய் குமார் சிங், யூனிட் ஹெட், அமர் உஜால, டெல்லி மற்றும் என்சிஆர், தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, பஜனை குழுவை கவுரவித்தார். கோவில்







நிர்வாகம் சார்பில் ஸ்ரீ ரவி பி சர்மா தலைமை விருந்தினரை கவுரவித்தார். ஸ்ரீதர் மற்றும் அவரது சகோதரர்கள் வி.பி.எஸ். சார்பில் ஸ்ரீ ராமசேஷன் கவுரவித்தார். மேலும், இச்சமயத்தில் ஆலய நிர்வாகத்தின் வெளி யிடப்பட்ட பதினாறு பக்க கோப்புறையை ஆர்முகுந்தன் வெளியிட்டார்.

இரண்டு நாட்களும், காலை கணபதி ஹோமத் துடன், ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம், ஸ்ரீ ஐயப்பன் ஸஹஸ்ரநாம அர்ச்சனை யுடன் காலை பூஜைகள் துவங்கின. தொடர்ந்து மகா தீபாராதனையும், பக்தர்கள் அனைவருக்கும் மகா பிரசாதமும் வழங்கப்பட்டது.

நொய்டாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், டெல்லி, இந்திராபுரம், காஜியாபாத் மற்றும் வைஷாலி, உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வருகை தர கோயில் நிர்வாகம் விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தார். அனைத்து பூஜை களும் கோயில் வாத்தியார் ஸ்ரீ மணி கண்டன் சர்மா செய்தார்.



எஸ்.வெங்கடேசன்

## கும்பகோணம் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம்

புனித காவிரி நதிக்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ சஞ்சீவி ஆஞ்சநேயர் கோவில், ஆஞ்சநேயர் தீவிர பக்தர்கள் தனியாரால் நிர்வகிக்கப்படும் மிகவும் பழமையான கோவிலாகும்.

பழமையான இந்தக் கோவிலை சுற்றிலும் சேதங்கள் இருந்தால், பழுதுபார்த்து புதுப்பிக்க வேண்டியிருந்தது.

அவரது விருப்பம் மற்றும் வழிகாட்டு தலின்படி, கோவில் புதுப்பிக்கப்பட்டு, அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் 17 நவம்பர் 2024 அன்று விரிவான முறையில் நடத்தப்பட்டது.

பக்தர்கள் மகா கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு, பகவான் ஸ்ரீ சஞ் சீவி ஆஞ்சநேயர் அருள் பொழிந் தனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# மனிதன் கடவுளை மறுத்ததினால் சூழ்நிலை பயம் ஏற்படுகிறது

e-magazine
aanmeegamalar.com

சீடன்: சுகம் அடைய கஷ்டப்பட வேண்டுமா?

ஞானி: சுகத்தை அனுபவிக்கும் மனிதன்கஷ்டப் படுகிறான்; ஆனால் அது மறைக்கப்படுவ தால் தெரிவதில்லை.

சீடன்: இதுஏன் அனைவருக்கும்தெரிவதில்லை?

ஞானி: பேரறிவு கொண்ட மனிதர்களாக இருந்தா லும் சிற்றறிவு கொண்ட மனிதர்களாக வாழ்வதால்.

சீடன்: இறைவன் ஏன் அவ்வளவு முக்கியமான வன் ஆனான்?

ஞானி: ஆத்மாவின் தலைவனான இறைவன் ஆத்மாவுக்கு துணையாக உள்ள உற்ற நண்பன், அதனால் ஆத்மாவிற்கு மாத்திரம் ஆரோக்கியத்தைத் தருபவனல்ல கடவுள். உடல், பொருள், ஆவி அனைத்துக்கும் காப்பு அவனே.

சீடன்: மனிதன் அவ்வளவு முக்கியமாக முடிய ாதா?

ஞானி: மலமில்லாத மனிதன் இருந்தால் அவனே கடவுளாவான்.

சீடன்: பின் ஏன் மனிதன் பயப்படுகிறான்?

ஞானி: மனிதனுடைய பலம் உலகத்திலுள்ள எந்த பொருட்களிலும் இல்லை, கடவுளை மறுத்ததினால் தான் சூழ்நிலை பயம் அவனுக்கு ஏற்படுகிறது,

சீடன்: சூழ்நிலை பயத்தினால் தான் கடவுளை நினைக்க முடியவில்லை?

ஞானி: சூழ்நிலை பயத்தினால் பாதிக்கப்பட்ட நீ உப்பு, புளி, மனைவி, குடும்பத்தை மறக்கவில்லையே. கடவுளை மாத்திரம் ஏன் மறந்தாய்?

சீடன்: மறக்கவில்லையே, பூஜைகள் செய்துகொண்டு இருக்கிறே ாமே?

ஞானி: பக்தர்களின் உள்ளம் தான் ஆண்டவனுக்கு, நினைக் காத உன் பூஜை, அபிஷேகம், கோயில் எல்லாம் செயற்கை.

சீடன்: எதைப் பார்த்தாலும் சந்தேகம்வருகிறதே?

ஞானி: எந்த மார்க்கத்திற்குப் போவதற்கு முன்னா லும் மனிதனுக்கு வருவது சந்தேகமே. அதை தீர்த்து வைப்பதே அறிவு.

சீடன்: விருப்பம் எப்பொழுது வரும்?

ஞானி: கடவுள் வேண்டும் என்ற அபிப்பிராயம் வந்தால்.

சீடன்: விருப்பம் எப்பொழுது வராது?

ஞானி: பக்தி தேவை இல்லை என்று எண்ணும் போது.

சீடன்: கருத்துக்களை எப்படி வாங்கிக் கொள்ள வேண்டும்?

ஞானி: எந்தக் கருத்தையும் உடனே தலையில் வைக்காதே. காதால் நன்றாகக் கேட்டுக் கொள். புரிந்து கொள்ளாமல் தலையில் போட்டால் வெறி பிடிக்கும். தெரு நாயாக இருந்தாலும் வீட்டு நாயாக இருந்தாலும் கடித்தால் ஊசி போட்டுக் கொள்ள வேண் டும்.

சீடன்: கடவுளும் மதமும் எதற்கு?

ஞானி: கையில் அரிசியை வைத்து சமைத்துப் போட முடியாது என்பதால் பானை தேவைப்பட்டது. மனம் தானாக அமைதி யடையாது என்பதால் கடவுளும் மதமும் தேவைப்படுகிறது. உலக விஷயங்களால் கெடக் கூடாது என்பதால் கடவுளை உள்ளே நுழைத்தார்கள்.




சீடன்:உருமுள்ள கடவுள் தேவையா?

ஞானி: அது உன் மன நிலை யைப் பொறுத்தது. உலகம் விரிவடை வதற்குத் தக்கபடி கடவுள் தன் உருவத்தை மாற்றிக் கொள்கிறான்.

சீடன்: அது எப்படி?

ஞானி: நமக்குள்ளே சுவாமி சிரிப் பது தெரியும்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



e-magazine
aanmeegamalar.com

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203


**சீடன்:** உணர முடிவதில்லையே?

**ஞானி:** உயிருக்குதான் தேகத்தினிடத்திலே அதிகப் பற்று, மன துக்கு அவ்வளவு பற்று இல்லை. அதனால் அது அடிக் கடி ஓடிப் போகிறது. அதை ஓடாமல் கட்டுப்படுத்த பக்தி செய். இறைவன் சிரிப்பது தெரியும்.

**சீடன்:** மகான்களுக்கு இது எளிதாக உள்ளதே?

**ஞானி:** மகானும் உன்னைப் போல மனிதன் தானே. ஆனால் எப்பொழுதும் கடவுளையே பொருட்படுத்திக் கொண் டிருப்பதால் உலக விஷயங்களில் சலனம் ஏற்படாது.

**சீடன்:** ஞானிகளின், மகான்களின் உலக, தேக விஷயங்கள்?

**ஞானி:** விட்டவர்களுக்கு தான் கடவுளின் விளையாட்டு புரியும். ஞானிகளின் தேக, உலக அபிமானத்தை ஆண்டவன் ஏற்கிறான்.

**சீடன்:** இது சராசரி மனிதனுக்கு வருவதில்லை, வரப் போவது மில்லை?

**ஞானி:** அப்படிச் சொல்லாதே. வராததால் நாம் பாபிகள் என்று அர்த்தமில்லை. புண்ணியத்தை சேர்க்கத் துவங்க வில்லை அவ்வளவுதான்.

**சீடன்:** எங்களை உற்சாகப்படுத்த எளிமையாக்குகிறீர்கள்?

**ஞானி:** அப்படியல்ல. உங்களில் அநேகம் பேருக்கு ஆசை இருக்கிறது. அது அனுபவமாகும்போது அது சரி ஆகிவிடும். அதற்கு பக்தி செய்யத் தொடங்கு.

**சீடன்:** மந்திரம் என்றால் என்ன?

**ஞானி:** உருவத்தை எடுத்துக் காட்டும் சொல்லே மந்திரம்.

**சீடன்:** அது ஏன் முக்கியமானது?

**ஞானி:** பெரிய வியாக்கியானங்கள் மனதை மாற்றாத நிலையில் சிறிய நாமாக்களை இராமா, முருகா என்பதே மனதை மாற்றுவதால் அவை முக்கியம்.

**சீடன்:** இந்த மந்திரம் தான் நமக்கு எப்படி தெளிவாகும்?

**ஞானி:** ஏதாவதொரு சொல் தான் சீடனுக்கு மந்திரம் என்பதால் ஞானிகளின் ஆயிரக்கணக்கான வார்த்தைகளைக் கேட்க வேண்டும் சீடன்.

**சீடன்:** மந்திரத்தின் அர்த்தம் விளங்க வேண்டாமா?

**ஞானி:** பக்தியுடன் பார்த்தால் ஒரு சொல்லுக்கு நூறு அர்த்தங்கள் புரிந்து இலக்கணமே இலக்கியம் ஆகிறது.

**சீடன்:** மந்திரங்களின் உயர்வு என்ன?

**ஞானி:** அனுபவம் இல்லாமல் மந்திரத்தை சொல்வதனால் பலனும் கிடைப்பதில்லை, சலிப்பும் ஏற்படுகிறது.

**சீடன்:** புராணங்களின் உபயோகம் என்ன?

**ஞானி:** இராமாயணமும், சிவபுராணமும் அறிவைத் தருகிறது. இராமா, சிவா என்ற மந்திரங்கள் தான் நம்மை மாற்றி ஞானத்தைத் தருகிறது.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
அழகுராஜா
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# சுருட்டை படையலாக ஏற்றுக் கொண்ட விராலிமலை முருகன்

விராலிமலை முருகன் மீது அதீத பக்தி கொண்டவர் கருப்பமுத்து எனும் முருக பக்தர்.

அப்போது விராலிமலை முருகன் கோயிலில் திருப்பணி நடந்து கொண்டிருந்தது, அந்த நேரத்தில் அப்பணிகளுக்குள் தன்னையும் ஆட்படுத்திக் கொண்டவர் கருப்பமுத்து, ஒருசமயம் விராலி மலை முருகன் கோவிலுக்கு செல்லும் நேரத்தில், ஆற்றில் வெள்ளம் வந்திருக்கின்றது அதனைக் கடக்க யோசித்து நின்றிருக்கின்றார் கருப்ப முத்து.

அந்த கொட்டும் மழையில் குளிர் தாங்காமல் பக்தரான கருப்பமுத்து ஆற்றை கடக்க யோசித்தபடியே சுருட்டு புகைத்திருக்கின்றார்.

அதேநேரம் அவரிடம், குளிரில் நடுங்கியபடி வந்த ஒருவர் சுருட்டு கேட்டிருக்கின்றார்.

கருப்பமுத்துவும் ஒரு சுருட்டை கொடுத்து விட்டார்!

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

அந்த நபர், எனக்கு சுருட்டு தந்த உமக்கு ஆற்றைக் கடக்க உதவுகின்றேன் எனச் சொல்லி ஆற்றை கடக்க பெரிதும் உதவியுள்ளார். ஆற்றைக் கடந்ததும் உதவிய நபரைக் காணவில்லை, தீடிரென அந்த நபர் மறைந்து விட்டார்.

கருப்பமுத்து குழம்பியபடியே கோயிலை வந்த டைந்தால்... அங்கே அவர் அந்த நபருக்கு கொடுத்த சுருட்டு முருகப் பெருமான் முன் கிடந் திருக்கின்றது.




வந்தது... முருகப் பெருமானே எனப் பணிந்தார் கருப்பமுத்து.

அதிலிருந்து முருகப் பெருமானுக்கு சுருட்டு வைத்து வழிபடும் வழமை வந்து பெருகிற்று.

பக்தர்கள் முருகனுக்கு சுருட்டு வைத்து வழிபடும் அதிகரிக்க துவங்கியதும், புகைக்கும் வழக்கத்தை ஊக்குவிப்பதாக பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன.

இதைக் கருத்தில்



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!




கொண்ட அன்றைய புதுகோட்டை மகாராஜா இந்த சுருட்டு வைக்கும் வழக்கத்தை தடை செய்து உத்தரவிட்டார்.

அன்று இரவு புதுகோட்டை மகாராஜா கனவில் சென்ற முருகன்.

“பக்தர்கள் பிரச்சினைகளை புகையாகப் போக விடுவதில் உனக்கென்ன பிரச்சினை, பக்தர்கள் சுருட்டு வைத்து வழிபடுவதற்கு ஏன் தடை !?” என்று கேள்விகணைகளைத் தொடுத்திருக்கிறார் விராலிமலை முருகன்.


முருகனின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாத புதுக்கோட்டை மகாராஜா கனவிலிருந்து விழித்து முதல் வேலையாக விரலாலிமலை முருகன் சன்னதியில் சுருட்டு வைத்து வழிபட எந்த தடையும் இல்லையென்று சாசனத்தில் கையெழுத்திட்டு தடையினை அகற்றினார்.

இன்றும் விராலி மலை முருகன் சன்னதியில் சுருட்டுவைத்து வழிபடும் தொடருகிறது.

- மகாராஷ்டிரா மாநிலம் எல்லோரோ குகைகளுக்கு அடுத்து உள்ள “குஸ்மேசம்’ என்னும் ஊரில் உள்ள சிவலிங்கம் குங்குமத்தால் ஆனது.
- பொதுவாக பெருமாள் கோயிலில்தான் சடாரி வைப்பார்கள். ஆனால் மூன்று சிவன் கோயில்களில் மட்டும் சடாரி வைக்கப்படுகிறது. அவை காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயில், காளஹஸ்தி கோயில், மற்றும் சுருட்டப்பள்ளி சிவன் கோயில் ஆகும்.
- திருவக்கரை வக்கிரகாளியம்மன் கோயிலில் உள்ள சிவபெருமானது பெயர் சந்திரமௌலீஸ்வரர். அவர் மும்முகலிங்கமாக தரிசனம் அளிக்கிறார். அதில் கிழக்கு முகம் தத்புருஷ லிங்கம் என்றும், வடக்கு முகம் வாமதேவ முகமாகவும், தெற்கு முகம் அகோர மூர்த்தியாகவும் வணங்கப் படுகின்றனர்.
- காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் ஆலயத்தில் சிவன் எட்டுக்கைகளுடன் சிற்பமாகக் காட்சியளிக்கிறார்.



e-magazine
aanmeegamalar.com


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
FREE
180 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
eBook
FREE DOWNLOAD
யாகத்தால் மழை வருமா?
முட்டாள்தனமான கேள்விக்கு
அறிவியல் ரீதியான விளக்கம்
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com

# ஆன்மீக வழியில் அமைதி

அகங்காரம், பொறாமை, விருப்பு, வெறுப்பு, சுயநலம் போன்றவை நம்மிடம் அணுகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆன்மீகத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் பொறாமை, விருப்பு, வெறுப்பு, கர்வம் போன்றவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அகங்காரத்தைப் பற்றி ''ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனை சுட்டறுத்து, தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்'' என்று பத்திரகிரியார் கூறுகிறார். இறைவனை சரணடைந்தால் ஒழிய பொய், அகங்காரம், பொறாமை போன்ற தீய பண்புகள் நம்மை விட்டு நீங்காது என்று வடலூர் வள்ளலார் கூறுகிறார். பகட்டாக உடை அணிவது, ஆடம்பரமாக செயல்படுவது போன்றவை ஆன்மிக வாழ்விற்கு புறம்பான செயல்கள் என்று வடலூர் வள்ளலார் கூறுகிறார்.

ஆன்மிகமலர்.காம்

கர்வம் என்பது மனிதனின் ஒரு மோசமான குணம் ஆகும். அதாவது மனிதனின் மோசமான மனப்பான்மை ஆகும். அதாவது ஒருவர் மற்றவர்களை மதிக்காமல் அவர்களிடம் கீழ்த்தரமாக நடந்து கொள்வது ஆகும். அதாவது மற்றவர்களை விட தான்தான் மிகவும் உயர்ந்தவன் என்ற மன நிலையில் செயல்படுவதை கர்வத்தின் உச்சநிலை என்று குறிப்பிடலாம். நாம் வணங்கும் இறைவன் மீது பக்தி செலுத்துவதில்கூட கர்வம் கூடாது என்று ஆன்மிகம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக மகாபாரதத்தில் அர்ச்சுனன், ஆஞ்சநேயர் சந்திக்கும் ஒரு காட்சி.

ஆஞ்சநேயர் ஒரு காட்டில் தனிமையில் அமர்ந்து ஸ்ரீஇராமரை நினைத்து தியானம் செய்துகொண்டு இருந்தார். அப்போது அங்கு வந்த அர்ச்சுனன் ஆஞ்சநேயரைப் பார்த்து இலங்கை செல்வதற்கு கடல் நடுவே வானரங்களைக் கொண்டு ஏன் பாலம் அமைத்தீர்கள். வில் வித்தையில் சிறந்த கோதண்டராமன் அம்புகளினால் சர பாலம் அமைத்து கடலை வானரங்கள் கடந்து இருக்கலாமே என்று

84



கூறினார். நானாக இருந்தால் என்னுடைய வில்வித்தை திறமையால் அம்புகளால் சர பாலம் அமைத்து இருப்பேன் என்று அர்ச்சுனன் கர்வத்துடன் ஆஞ்சநேயரிடம் கூறினான்.

ஆஞ்சநேயர் அர்ச்சுனனை நோக்கி தாங்கள் அமைக்கும் சர பாலம் என் ஒருவனுடைய பலத்தையே தாங்க முடியாமல் நொறுங்கி விடுமே மற்ற வானரங்களை சர பாலம் எப்படித் தாங்கும்.என்று பணிவுடன் கூறினார். இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு இறுதியில் இது தொடர்பாக ஒரு போட்டி நடத்துவது என்று முடிவுக்கு வந்தனர். அதன்படி அர்ச்சுனன் தன்னுடைய வில் வித்தை திறமையால் அம்புகளால் அமைக்கும் சர பாலத்தின் மீது ஆஞ்சநேயர் நடந்து செல்ல வேண்டும். அவ்வாறு ஆஞ்சநேயர் நடந்து செல்லும்போது பாலம் நொறுங்காமல் உறுதியாக இருந்தால் அர்ச்சுனன் வெற்றி பெற்றவன் என்றும், அவ்வாறு ஆஞ்சநேயர் நடந்து செல்லும்போது பாலம் நொறுங்கி விட்டால் ஆஞ்சநேயர் வெற்றி பெற்றவன் என்றும் இருவரும் தங்களுக்குள் பேசி ஒப்புக்கொண்டார்கள்.

e-magazine
aanmeegamalar.com

அர்ச்சுனன் சர பாலம் அமைக்கும் போட்டியில் ஆஞ்சநேயரிடம் தோல்வி அடைந்தால் வேள்வித்தீ வளர்த்து தன்னோட உயிரை மாய்த்துக் கொள்வதாக அர்ச்சுனன் கூறினான். அர்ச்சுனனிடம் இந்தப்போட்டியில் தோல்வி அடைந்தால் ஆயுள் முழுதும் அர்ச்சுனனுக்கு அடிமையாக இருப்பதாக ஆஞ்சநேயர் கூறினான். வில்வித்தையில் தனக்கு நிகர் யாரும் இல்லை என்ற கர்வத்துடன் அர்ச்சுனன் அம்புகளால் சரபாலம் அமைத்தான். ஆஞ்சநேயர் இராமபிரானை மனதில் தியானம் செய்துகொண்டே ஸ்ரீராம நாமத்தை ஜெபித்தபடி சர பாலத்தின் மீது ஏறி நின்றவுடன் சர பாலம் நொறுங்கியது.

அர்ச்சுனன் தன்னோட தோல்வியை ஆஞ்சநேயரிடம் ஒப்புக்கொண்டு வேள்வித்தீயில் தன்னோட உயிரை மாய்த்துக்கொள்வதற்கு தயாரானான். ஆஞ்சநேயர் போட்டியில் வெற்றி அடைந்தாலும் அர்ச்சுனன் வேள்வித்தீயில் மடிவதை அவர் மனம் விரும்பவில்லை. எனவே அர்ச்சுனன் வேள்வித்தீ அமைத்துக்கொண்டிருப்பதை தடுத்துக்கொண்டு இருந்தார். அப்போது அங்கு வந்த முனிவர் சூழ்நிலையைப் பார்த்தவர் ஆஞ்சநேயர் அர்ச்சுனன் இருவரின் நிலையையும் போட்டியைப் பற்றியும் கேட்டு அறிந்தார்.

ஒரு போட்டியில் நடுவர் இல்லாமல் ஒருவரின் வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்ய முடியாது என்று முனிவர் இருவரிடமும் கூறினார். எனவே நீங்கள் இருவரும் என் முன்னிலையில் மீண்டும் ஒருமுறை போட்டியை நடத்துங்கள், நடுவராக இருந்து வெற்றி தோல்வியைப் பற்றி நான் தீர்ப்பு அளிக்கிறேன் என்று முனிவர் கூறினார். அதற்கு இருவரும் சம்மதம் தெரிவித்தனர். அர்ச்சுனன் முனிவர் முன்னிலையில் இப்போது தான் அமைக்கும் சர பாலம் உறுதியுடன் இருந்து போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்று கிருஷ்ண பகவானை மனதில் பணிவுடன் வேண்டிக்கொண்டு சர பாலம் அமைத்தான். ஆஞ்சநேயர் சர பாலத்தில் கடந்தமுறை ஏறி நின்றவுடன் நொறுங்கி விழுந்ததைப்போல் இந்தமுறையும் பாலம் நான் ஏறி நின்றவுடன் நொறுங்கி விடும் என்று தன்னோட பலத்தின் மீது நம்பிக்கை வைத்து ஸ்ரீராம நாமத்தை ஜெபிக்க மறந்து கர்வமுடன் சர பாலத்தின் மீது ஏறி நின்றார். குதித்துப் பார்த்தார். அர்ச்சுனன் அமைத்த சர பாலம் மிகவும் உறுதியாக இருந்தது. இம்முறை ஆஞ்சநேயர் போட்டியில் தோல்வி அடைந்தார்.

முனிவராக வந்த பரந்தாமன் இருவருக்கும் காட்சி அளித்து இருவரின் கர்வத்தையும் நீக்கினார். அர்ச்சுனன் முதல்முறை சர பாலம் அமைக்கும்போது பகவான் கண்ணனை மறந்து தன்னைவிட வில்வித்தையில் சிறந்தவன் உலகில் யாரும் இல்லை என்று நினைத்து கர்வத்துடன் செயல்பட்டான். அதனால் போட்டியில் அர்ச்சுனன் தோல்வியைத் தழுவினான். இரண்டாவது முறை அர்ச்சுனன் சர பாலம் அமைக்கும்போது பகவான் கண்ணனை பிரார்த்தனை செய்து கர்வம் நீங்கி பாலம் அமைத்தான். அதனால் போட்டியில் அவன் வெற்றி பெற்றான்.

முதல்முறை ஆஞ்சநேயர் பாலத்தில் ஏறுவதற்கு முன்பு தன்னோட பலத்தின் மீது வீண் கர்வம் கொள்ளாமல் பகவான் இராமபிரானை நினைத்து ராம நாமத்தை ஜெபித்துக்கொண்டு அர்ச்சுனன் அமைத்த சர பாலத்தின் மீது ஏறி நின்றவுடன் பாலம் நொறுங்கியது. ஆஞ்சேநேயர் தன்னோட பலத்தின் மீது கர்வம் கொள்ளாமல் ராம பிரானை நம்பி செயல்பட்டதால் ஆஞ்சநேயர் வெற்றி பெற்றார். இம்முறை முனிவர் முன்னிலையில் ஆஞ்சநேயர் தன்னோட பலத்தின் மீது நம்பிக்கை வைத்து ராம நாமத்தை ஜெபிக்க மறந்து கர்வமுடன் சர பாலத்தின் மீது ஏறி நின்றார். குதித்துப் பார்த்தார். அர்ச்சுனன் அமைத்த சர பாலம் மிகவும் உறுதியாக இருந்தது. இம்முறை ஆஞ்சநேயர் போட்டியில் தோல்வி அடைந்தார்.

ஒரு மனிதனிடம் கர்வம் தோன்றினால் கடவுளை மறந்து கடமைகள் பொறுப்புக்கள் எல்லாம் மறைந்து விடும். மனிதன் கர்வப்படாமல் செயல்படும்போது மனிதன் தேடும் விரும்பும் அமைதி அவனையும் அறியாமல் வந்து சேரும் என்பதை அர்ச்சுனன் ஆஞ்சநேயர் இருவர் கர்வத்தையும் பரந்தாமன் நீக்கியதன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

– அமைதி தொடரும்


எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி:
9894043308


# பெண்களுக்கு உகந்த மார்கழி

‘‘ஆடியில் அம்மனும், புரட்டாசியில் பெருமாளும், மார்கழியில் அனைத்து தெய்வங்களும் என, மாதத்துக்கு ஒரு தெய்வம் என வழிபட வகுத்துள்ளார்கள் நம் முன்னோர். ஏனெனில், ஆடியில் பலமுள்ள காற்று வீசும். அப்படி வீசும் காற்று விஷக்காற்று என்பதால், மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து அம்மன் கோயில்களில் உள்ள கிருமிநாசினியான வேப்பிலையின் மணத்தை சுவாசிக்கும் போது, விஷக்காற்று முறியடிக்கப்படுவதுடன், இயற்கையான ஆக்சிஜனும் கிடைக்கிறது.

இதே புரட்டாசி மழைக்காலம் என்பதால் மக்கள் தங்கள் வீடுகளிலேயே அப்போது கிடைக்கும் சத்து மிகுந்த காய்கறிகளைப் படைத்து பெருமாளை வழிபடுகிறார்கள். இம்மாதத்தில் காய்கறிகளின் சத்தும், துளசி தீர்த்தமும் நம் உடலுக்குத் தேவையான ஆரோக்கியத்தைத் தருகிறது.

இதே போல் மார்கழி மாதத்தின் அதிகாலையில், ஓஸோன் படலம் வழி, ஆரோக்கியமான, உடல் நலனைத் தரும் காற்று அதிகம் பூமியில் இறங்கும். இது நம் வியாதிகளைக் கட்டுப்படுத்தும் என்பதால்தான் மார்கழி அதிகாலையில் பெண்கள் எழுந்து சாணம் தெளித்து கோலமிட வேண்டும் என முன்னோர்கள் கூறினர்.

நம் உடலில் 80% ஆக்சிஜனும் 20% கரியமில வாயுவும் இருக்க வேண்டும். தவறான பழக்க வழக்கங்களால் கூடுதலாகிவிட்ட விஷவாயுவான கார்பன்டைஆக்ஸைடை விரட்டி ஆக்சிஜனை நம் உடல் பெறுவதால்



e-magazine
aanmeegamalar.com

வெள்ளை அணுக்கள் இரத்தத்தில் பெருகி நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது. இந்த நல்ல வாயுவை சுவாசிக்கும் பொருட்டே அதிகாலை மார்கழியில் எழுவது என்பதை தெய்வத்தின் பெயரால் கட்டாயப்படுத்தி வைத்துள்ளனர் நம் முன்னோர்கள்.”

“பெண்ணை எதற்கும் ஒப்பிட முடியாத ஓர் உயரிய இடத்தில் வைத்துள்ளது நம் சாஸ்திரங்களும் வேதங்களும். ஒரு பெண் 6 விதமான தன்மைகளைக் கொண்டவள். அவளே தெய்வமாகவும், மனைவியாகவும், குருவாகவும், நண்பனாகவும், ஆசானாகவும், போதகனாகவும் (செயல்திறன்) ஒரு ஆணுக்கு அமைகின்றாள். அந்தப் பெண்ணின் ஆரோக்கியம் நன்றாக இருந்தால்தான் ஒவ்வொரு குடும்பமும் ஆரோக்கியமாக இருக்கும். ஆகவேதான் பெரும்பாலான விரதங்களில் பெண்களின் பங்கு அதிகம் உள்ளது.’’

“எந்த மனிதரும் தவறுகள் செய்யாமலில்லை. அறிந்து செய்யும் தவறுகள் ஒரு பக்கம், அறியாமல் செய்யும் தவறுகள் மறுபக்கம். நடக்கும் போது நம் காலடிபட்டு எறும்பு, பூச்சி போன்ற எத்தனை உயிர்கள் சாகின்றன? இதுவும் ஒருவகை பாவம்தானே? இதனால் எழும் தோஷத்தினால் கன்னிப் பெண்களுக்கு திருமணத்தில் தடை வரும். இதைத் தவிர்க்கவே பெண்கள் வாசலில் அரிசி மாவினால் கோலம் போடும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டது.

மழையினால் உணவுக்கு வழியின்றி இரவு முழுவதும் அடைந்து கிடக்கும் சிறு உயிரினங்கள் அதிகாலையில் வெளிவந்து தமக்குத் தேவையான உணவாக அரிசி மாவைத் தேடி வந்து உண்ணும். அந்த உணவினை சிறு உயிரினங்களுக்கு அளித்த பெண்களுக்கு, தோஷங்கள் அகலும்.’’

‘‘பசு மாட்டின் சாணம் அற்புத பலன்களைத் தரும் ஒப்பற்ற கிருமிநாசினி என்பது உலகளவில் பல அறிவியல் வல்லுநர்களும் ஒப்புக்கொண்ட உண்மை. நம் வீட்டைச் சுற்றிப் பரவியிருக்கும் பாக்டீரியாவை அழிக்கும் சக்தி கொண்டது சாணம். கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியாக்களினால் நோய்த் தொற்றுகள் ஏற்படும். இதைத் தவிர்க்கவே சாணத்தில் மகாலட்சுமி உறைவதாகவும், சாணப் பிள்ளையார் பிடித்து வைத்தால் நல்லது என்றும் கூறி வாசலில் சாணத்தைக் கரைத்துத் தெளிப்பதை பழக்கமாக்கினர் நம் முன்னோர்கள்.’’



‘‘சாணத்தின் மீது வைக்கும் பூக்களின் தேனை உறிஞ்சுவதற்காக வரும் தேனீக்களுக்கு உணவு கிடைப்பது மட்டுமின்றி, சாணத்தின் பயனால் அந்தத் தேனீயின் விஷமும் எடுக்கப்படுகிறது.

இப்படி ஒன்றுக்கொன்று தொடர்புடைய நல்ல விஷயங்களை அடக்கிய மார்கழி மாதக் கோலங்களால் பெண்களின் கற்பனைத் திறன் வளர்வதுடன் காசு தராமலேயே யோகாவை செய்த பலனும் கிட்டும். ஒருமுக சிந்தனை ஏற்பட்டு அறிவும் கூர்மையாகும்.’’

அந்தக் காலத்தில் ஆண்டாள் இந்த மார்கழி மாதத்தில் தினம் ஒரு பாசுரமாகப் பாடிச் சென்று, தான் மட்டும் பெருமாளைப் பார்த்து பலன் அடையக் கூடாது என்று, தன் தெருவிலிருந்த கன்னிப் பெண்கள், குழந்தை இல்லாதவர்கள் என எல்லாத் தரப்பு பெண்களையும் தன்னோட அழைத்துச் சென்று, தன் மனம் கவர்ந்த கண்ணனின் முன் நின்று ‘நீயே என் கணவனாக வர வேண்டும்‘ என்று வழிபடுகிறாள். அதோடு ஆண்டாளுடன் சென்ற பெண்களும் கண்ணனுடன் ஐக்கியமாகி தாங்கள் நினைத்ததை அடைகின்றனர்.

அதிகாலை எழுந்து ஒரு மனதுடன் தனக்குச் சிறந்த கணவன் கிடைக்க வேண்டும் என்ற ஆழ் மனது நம்பிக்கையுடன், பரிசுத்தமான காற்றை சுவாசித்து விரதம் மேற்கொள்ளும் போது அப்பெண்ணிடமிருந்த எதிர்மறை எண்ணங்கள் விலகி, மன ஆரோக்கியம் மேம்பட்டு அவள் நினைத்த காரியம் கைகூடும். அதாவது நல்ல கணவனை அடையும் வழி கிடைக்கும்.”

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர்.காம் வெளியிடும்

# மாத காலண்டர்







கீழே உள்ள எண்ணிற்கு
PayTM Gpay PhonePe PayPal செய்து
காலண்டரை பெறுங்கள்

## 3 காலண்டர்
## 100 ரூபாய்
இலவச டெலிவரி

தமிழில் இதுவரை யாரும் வெளியிடாத வகையில்,
பஞ்சாங்க குறிப்புகள், நல்லநேரம், அஷ்டமி, நவமி, பௌர்ணமி
பிரதோஷம், பஞ்சமி, அமாவாசை (துவக்கம் முதல் முடிவு வரை),
வங்கி விடுமுறை தினங்கள், அரசு விடுமுறை தினங்கள்,
முக்கிய திருவிழாக்கள் போன்ற தகவல்களுடன்

**மினி பஞ்சாங்கமே உள்ளடக்கிய மாத காலண்டர்,**

ஒவ்வொரு மாதத்திற்கும் பெரிய அளவிலான
அழகிய தெய்வபடங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய பொக்கிஷம்**

தகவல்களுக்கு: 9994162182/ 9994323622/ 9444228203